விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 தை 15 சனிக்கிழமை (29.01.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 041

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## கச்சதீவை மீளப்பெறுமாறு ஜெயலலிதா வலியுறுத்தல்



(சென்னை)

கச்சதீவை இலங்கையிடமிருந்து மீளப் பெற்றுக்கொள்ள இந்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அண்ணா திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளர் செல்வி ஜெ.ஜெயலலிதா கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் நடுக் கடலில் தாக்கப்படும் சம்பவங்களை தடுத்து நிறுத்த முடியாவிட்டால்பிரதமர் மன்மோகன் சிங் பதவி விலக வேண்டும் என அனைத்து இந்திய அண்ணாதிராவிட முன்னேற்றக்கழகத்தின் பொதுச் செயலாளர் செல்வி ஜெலலிதா ஜெயராம் தெரிவித்துள்ளார்.

பலவீனமான அரசாங்கமும் பலவீனமாக பிரதமரும் காணப்படுவதனால் தமிழக மீனவர்கள் மீது தொடர்ச்சியாக தாக்குதல் நடத்தப்பட்டுவருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கமும் மீனவர்களை பாதுகாக்க தவறியுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

1970ஆம் ஆண்டு கச்ச தீவை இலங்கைக்கு வழங்கிய (16ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு எதிராக சென்னையில் பேரணி

(சென்னை)

சென்னையில் அமைந்துள்ள இலங்கைக்கான தூதரகத்தை நோக்கி தடையை மீறிப் பேரணி சென்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் ஜி.ராமகிருஷ்ணன் உட்பட 100 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக இந்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கொல்லப்படுவதை கண்டித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஆழ்வார்பேட்டையில் உள்ள தூதரகத்தை நோக்கி நேற்று காலை பேரணி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (16ஆம் பக்கம் பார்க்க)

## மர்மப் பொருள் வெடித்ததில் ஒருவர் பலி; ஒருவர் படுகாயம்

(கொழும்புத்துறை)

விசுவமடுப் பகுதியில் மர்மப்பொருள் வெடித்ததில் இளைஞன் ஒருவர் பலியானார். மற்றொருவர் படுகாயம் அடைந்தார். இது தொடர்பில் தெரியவருவதாவது,

விசுவமடுவில் மர்மப் பொருள் வெடித்ததில் இரு இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில் நேற்றிரவு யாழ்.போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டனர்.

வெற்றுக்காணி ஒன்றை துப்புரவு செய்து கொண்டிருந்த போது நேற்றுப் பிற்பகல் (16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீதான தடையினால் வைகோவுக்கு பாதிப்பு இல்லை

### இந்.மத்திய அரசு நீதிமன்றில் மனு

(சென்னை)


**பயங்கரவாத நடவடிக்கைகள் தடைச்சட்டத்தின்படி விசாரணை நடத்தி விடுதலைப் புலிகள் மீது தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் வைகோவுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. சட்டத்தால் பாதிப்பு இருப்பதாக அவர் ஆதாரத்துடன் நிரூபித்தால் மட்டும்தான் அவர் தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள முடியும் என இந்திய மத்திய அரசு உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்துள்ளது.** (16ஆம் பக்கம் பார்க்க)

## வன்முறை சம்பவம் பதிவு கபே அமைப்பு அறிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுத்தாக்கல் நிறைவடைந்ததைத் தொடர்ந்து தேர்தல் வன்முறை சம்பவங்களும் பதிவாக ஆரம்பித்துள்ளதாக தேர்தல்களை கண்காணிக்கும் கபே அமைப்பு தெரிவித்துள்ளது.

அச்சுறுத்தல் மற்றும் தாக்குதல் சம்பவங்கள் மூலம் தேர்தல் சமயத்தில் அமைதியான சூழலை எதிர்பார்க்க முடியாது என இவ் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் தெரிவித்துள்ளார். (16ஆம் பக்கம் பார்க்க)



**இந்தியாவிலிருந்து வருகைதந்த அன்னை சித்தர் ஸ்ரீ ஸ்ரீ ராஜ்குமார் சுவாமிகளை அமைச்சர் பசில் ராஜபக்ஷ விமான நிலையத்தில் வரவேற்பதை படத்தில் காணலாம்.**

## இந்திய வெளிவிவகாரச் செயலர் இன்று இலங்கைக்கு திடீர் விஜயம்



(புதுடில்லி)

இந்திய வெளிவிவகார செயலாளர் நிருபமா ராவ் இன்று கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளார். இலங்கைக் கடற்படையினரால் தமிழ்நாட்டு மீனவர்கள் தொடர்ச்சியாக தாக்கப்பட்டுவருவது குறித்து பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்காகவே அவர் கொழும்புக்கு விஜயம் செய்வதாக புதுடில்லி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடற்படையினரால் தமிழ் நாட்டு மீனவர்கள் தொடர்ச்சியாக தாக்கப்பட்டுவருவது குறித்து இலங்கை (16ஆம் பக்கம் பார்க்க)

MUSIC இப்போது
டயலொக் TV இல்
Dialog

## நல்லிணக்க ஆணைக்குழு விசாரணை வரும் திங்களுடன் நிறைவு பெறும்!

### மே மாதம் இறுதி அறிக்கை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

உண்மையைக் கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழு எதிர்வரும் திங்கட்கிழமை மட்டுமே பொதுமக்களிடம் சாட்சியங்கள் திரட்டப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. திரட்டப்பட்ட சாட்சியங்கள் எதிர்வரும் மூன்று மாதங்களுக்கு ஆராயப்படவுள்ளதாகவும் மே மாதம் 15ஆம் திகதி வரையில் இறுதி அறிக்கை சமர்ப்பிக்க எதிர்பார்ப்பதாகவும் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இணைப்பாளர் லக்ஸ்மன் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனவரி மாதத்தின் பின்னர் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு சாட்சியங்களை ஏற்றுக்கொள்ளாது. அசாதாரண காரணிகளினால் சில வேளைகளில் சாட்சியங்கள் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் அவர் (16ஆம் பக்கம் பார்க்க)

**Study & Work in UK and Canada**

Hurry......for Jan-2011
Intake Get Register Now
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation

என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான விஸா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)


## விசேட பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் கோரல்

சர்வதேச தரம் வாய்ந்த பயிற்றுனர்களால் கணனிப் பயிற்சி,தையற் பயிற்சி,ஆங்கில பயிற்சி வகுப்புக்கள் பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி முதல் சலுகை அடிப்படையில் ஆரம்பிக்க வுள்ளதாக அறவழி போராட்டக் குழு தெரிவிக் கின்றது.

இருபாலாருக்கும் இவ் பிரத்தியேக வகுப் புக்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.பயிற்சி பெற ஆர்வமுள்ளவர்கள் தலைவர், அறவழிப் போராட்டக்குழு,கைதடி நுணாவில்,சாவகச் சேரி என்னும் முகவரிக்கு எதிர்வரும் 16ஆம் திக திக்கு முன்னதாக விண்ணப்பங்களை அனு ப்பி வைக்குமாறு அதன் தலைவர் ஸ்ரீ.சக்தி வேல் கேட்டுக் கொண்டுள்ளார். (ச)


வர்த்தகப் பெருமக்களே...

பெறுமதிமிக்க உங்கள் வியா பார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌர வத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290


# பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை 103 பேருக்கு இன்று நேர்முகத் தேர்வு

## நாளை மறுதினமும் நடைபெறும் என அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நாடளாவிய ரீதியில் 2010.05.08ந் திகதி நட த்தப்பட்ட பொது முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் III வகுப்புக்கு ஆட் சேர்ப்புச் செய்வதற்கான திறந்த பரீட்சையில் சித்தி யடைந்தவர்களின் பெயர் விபரங்கள் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் http://www.pubad.gov.lk என்னும் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இப்பட்டியலில் உள்ளவர்களுக்கு நேர் முகத்தேர்விற்கான கடிதங்கள் பொது நிர் வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் நேரடியாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக் கப்பட்டுள்ளன.

நேர்முகத்தேர்வு இவ்வமைச்சில் இன்று நடைபெறவுள்ளது. நேர்முகத்தேர்வில் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களின் விப ரங்களினை மேற்படி இணையத்தில் பார்வை யிடலாம்.

இந்நேர்முகத்தேர்வுக்கு இன்று பங்கு பற்ற முடியாதவர்கள் நாளை மறுதினம் 31ஆம் திகதி நடைபெறும் நேர்முகத்தேர் விலும் பங்குபற்ற முடியும் என யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அறிவித் துள்ளார்.

பரீட்சைக்கு செல்லும் போது கீழ்க் குறிப் பிடப்பட்டுள்ள ஆவணங்களை எடுத்து வரு மாறும் அறிவிக்கப்பட்டுள்ளது,

(1)தேசிய அடையாள அட்டை,செல்லு படியான வெளிநாட்டு கடவுச் சீட்டு அல்லது வேறு செல்லுபடியான அடையாள அட்டை யொன்று,(2)பிறப்புச் சான்றிதழ்,(3)பரீட்சை விண்ணப்பத்தை பூர்த்தி செய்யும் போது உபயோகித்துக் கொண்ட அனைத்துக் கல்விச் சான்றிதழ்களதும் மூலப்பிரதி, (4)பிறப்புச் சான்றிதழ் மற்றும் கல்விச் சான்றிதழின் படப் பிரதிகள்,(5)பாடசாலை விடுகைச் சான்றிதழின் மூலப்பிரதியும் படப் பிரதியும்,(6)தாங்கள் பாவிக்கும் பெயருக்கும் பிறப்புச் சான்றிதழில் மற்றும் ஏனைய சான் றிதழ்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெயருக்கு மிடையில் ஏதெனும் வேறுபாடுகள் இருப் பின் அந்த வேறுபாட்டை தெளிவு படுத்து வதற்கான சத்தியப் பிரகடனம்,(7)தங்களின் வதிவுப் பிரதேசத்தின் கிராம உத்தியோகத்த ரிடமிருந்து பெற்றுக் கொண்டு பிரதேச செயலாளரைக் கொண்டு மேலொப்பம் இடப்பட்ட வதிவு பற்றிய சான்றிதழ் (டி.எஸ்.3, டி.எஸ்.4 அல்லது ஆ.ஏ.க73 படிவம் மூலம் இருத்தல் வேண்டும்),(8)இவ் அழைப்புக் கடிதம் மற்றும் இதற்கு இணைத்து பூர்த்தி செய்யப்பட்டுள்ள படிவம்II,

நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டோ ரின் விபரம் வருமாறு,

ஜீ.சிவரஞ்சினி (புலோலி), பி.லோகதுர்காசினி (சுன்னாகம்), எஸ்.அன்ரனி விஜய குமார் (அல்வாய்),பி.நிசாந்தினி (அல்வாய்), ஆர்.ரமணி (அல்வாய்),எஸ்.தனுஜன் (தெகி வளை),வி.சதுர்மதி (நவக்கிரி), என்.ஜசிகா (வண்ணார்பண்ணை),பி.சியாமளா (திரு நெல்வேலி),கே.சிவசக்தி (திருநெல்வேலி) எஸ்.ஜெயமாலினி (பருத்தித்துறை),

வி.வாரகி (குரும்பசிட்டி),ஆர்.சியாமினி (அச்சுவேலி தெற்கு),பி.யசோதினி (கோப்பாய் தெற்கு),பி.டினேஸ்குமார் (கோப்பாய் மத்தி), ரி.கீர்த்தனா (மீசாலை),ஏ.சந்திரலிங்கம் (கைதடி),இ.சிவச்செல்வன் (வண்ணார்பண்ணை),

எஸ்.றொக்கேபில்ஜென் (யாழ்ப்பாணம்), ஏ.ரேகா (கரவெட்டி),என்.ஜெயமயூரன் (கர வெட்டி),என்.நரேஷ் (கரவெட்டி),ரி.தாரணி (தாவடி கிழக்கு),வி.வினோதினி (நல்லூர்),

ஏ.பிரதீபன் (சாவகச்சேரி),கே.கிரியா (சுன் னாகம்),டி.அமலரட்ணம் (சுண்டிக்குளி), எம்.தெய்வேந்திரம் (பருத்தித்துறை), ரி.திலீப் குமார் (மிருசுவில் வடக்கு),பி.கயந்தன் (இணு வில்),வி.நிதர்சன் (உரும்பிராய்), ஜே.சுயந் தினி (பாசையூர்),எஸ்.சிவநயனி (கந்தர் மடம்), வி.புவனேசன் (மல்லாகம்), எஸ்.வளர் மதி (அளவெட்டி),பி.மகாலக்சுமி (வதிரி),

ரி.பானுகா (திருநெல்வேலி கிழக்கு), ரி.மயூரகிரி (நீர்வேலி),ஏ.சிவசக்தி (மூளாய்), பி.பமித்திரா (ஆனைக்கோட்டை), டபிள்யூ. ஞானதயாளன் (பண்டத்தரிப்பு), வை.குக தாஸ் (பருத்தித்துறை), எஸ்.சிவவாணி (சரசா லை தெற்கு),வி.நிமலேஸ்வரன் (அத்தியடி), எஸ்.கம்சிதா (கோண்டாவில்),

எஸ்.மேகலா (சுன்னாகம்),எ.சிந்துஜா (பண்டத்தரிப்பு),எஸ்.சோபனா (மீசாலை), எஸ்.கிருஷ்ணகுமாரன் (கொக்குவில்), பி.துவாரகா (தோப்பு),எஸ்.லக்சனா (உசன் தெற்கு),எம்.சங்கீதா (சுழிபுரம்),

ஆர்.ரஜீந்தினி (சண்டிலிப்பாய்), கே.லக் ஸ்சினி (கந்தர்மடம்),எஸ்.கயந்தினி (கொழு ம்பு),எஸ்.தர்மிளா (மீசாலை வடக்கு), எ.கமல வேணி (மீசாலை),என்.பிரபாகர் (கோண்டா வில்),எம்.ஜெயந்தன் (வசாவிளான்), எம்.சி.ருபீ னா (இளவாலை),

ரி.இதயதாரணி (நெல்லியடி), எஸ்.சுகந் தினி (கரணவாய் தெற்கு), ஆர்.பிரிந்தா (அல்லாரை வடக்கு),எஸ்.சுவதிகா (சங் கரத்தை),என்.சிவதர்சினி (நவாலி வடக்கு), எஸ்.பாஸ்கரன் (யாழ்ப்பாணம்), ரி.கஜேந் திரன் (மாதகல்),

ஆர்.வித்யா (வண்ணார்பண்ணை), எஸ்.தமனிகை (அச்சுவேலி),ரி.துவாரகா (கொழும்புத்துறை), பி.பி.உசேந்தன் (உடுப்பிட்டி),கே.ராகவன் (கரவெட்டி), ஆர்.குருபரன் (வவுனியா),ரி.குகாயினி (உரும்பிராய்), வி.வினியா (வட்டுக்கோட்டை),

எஸ்.அனிதா (யாழ்ப்பாணம்),பி.கம்ஷா (புத்தூர்), ஏ.யசோதா (இணுவில் மேற்கு), பி.சிவந்தன் (யாழ்ப்பாணம்), ஜே.சங்கீதா (கட்டப் பிராய்),எஸ்.சிவ னேசன் (சித் தன்கேணி), எஸ்.சிவர ஞ்சினி (வல் வெட்டித் துறை), கே.கார்த்தீபன் (பொலி கண்டி கிழக்கு), ஜே.பிரியதர்சினி (யாழ்ப்பா ணம்),வி.தர்சினி (தெல்லிப்பழை),

பி.கர்பா (யாழ்ப்பாணம்),வி.சண்முகப் பிரியா (இணுவில்),என்.மனோகரி (சுழிபுரம்), என்.தா ரணி (யாழ்ப்பாணம் ),எஸ்.அகல்யா (கந் தர்மடம்),பி.கனிதா (புத்தூர்),என்.பாலநந்தன் (கந்தர்மடம்),எஸ்.ரிசாந்தன் (இளவாலை), என்.சிவநளினி (மூளாய் தெற்கு),

ஏ.வசந்தரூபி (நீர்வேலி),எம்.மஜீன் ஜென் சிகா (சுண்டிக்குளி),எஸ்.தாரணி (சுந்தரோடை), வி.சுபிதா (புத்தைமேனி),ரி.மயூரி (புலோலி), பி.சுரேந்தர் (கொற்றாவத்தை), எச்.சாமந்தி (பருத்தித்துறை),எஸ்.நளினி (துன்னாலை வடக்கு),ரி.பயோதரி (புலோலி).

### தற்காலிக இடமாற்றம்

## வட மாகாண கல்வி அமைச்சு அலுவலகம் யாழ்ப்பாண கல்வி வலயத்தில் இயங்கும்

(திருகோணமலை)

வடக்கு மாகாண கல்வி,பண்பாட்டலுவல் கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு அலுவலகம் அடுத்த வாரம் முதல் யாழ்ப் பாண வலயக்கல்வி அலுவலகக் கட்டிடத் தொகுதியில் தற்காலிகமாக இயங்கவுள்ளது.

இது தொடர்பில் வடக்கு மாகாண கல்வி அமைச்சு அலுவலகத் தகவல்களிலிருந்து தெரிய வருவதாவது,

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல் கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு திருகோணமலையிலுள்ள தனது அலுவல கத்தை அடுத்த மாதம் முதல் மருதனார்மடம் வலிகாமம் வலயக் கல்வி அலுவலக கட்டிடத் தொகுதியின் மேற்தளத்தில் புதிதாக அமைக் கப்படும் அலுவலகத்திற்கு மாற்றுவதற்கு திட்டமிட்டிருந்தது.

கடந்த 19ஆம் திகதி மருதனார்மடத்தி லுள்ள புதிய அலுவலகத்தில் தனது பணிகளை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தது,

எனினும் மருதனார்மடத்தில் அலுவலகத் திற்கான கட்டிட வேலையில் ஏற்பட்ட தாமதம் காரணமாக அடுத்த வாரம் முதல் யாழ்ப் பாண வலயக்கல்வி அலுவலகத்திற்கு கட்டிடத் தொகுதியில் வடக்கு மாகாண கல்வி பண் பாட்டலுவல்கள் அமைச்சு தனது அலுவல கத்தை தற்காலிகமாக இடம் மாற்றுகின்றது.

மருதனார்மடத்தில் அமைக்கப்பட்டு வரும் அலுவலகத்தின் கட்டிடப் பணிகள் நிறை வடைந்ததும் வடக்கு மாகாண கல்வி, பண் பாட்டலுவல்கள் அமைச்சு தனது பணிகளை அங்கு ஆரம்பிக்குமென அமைச்சின் தக வல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் எதிர்வரும் முதலாம் திகதி முதல் மருதனார்மடத்தில் தனது அலுவலகப் பணிகளை ஆரம்பிக்கின்றமை குறிப்பிடத்தக் கது. (ச)

## அதிபர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைக ளின் அதிபர்களுக்கான மாதாந்தக் கலந்து ரையாடல் நாளை மறுதினம் 31அம் திகதி திங்கட்கிழமை காலை 8.30மணி முதல் 3.30 மணிவரை யா/இணுவில் மத்திய கல் லூரியின் ஆரம்பப் பிரிவு மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

சகல பாடசாலைகளின் அதிபர்களும் 2011ஆம் ஆண்டிற்கான செயற்திட்டங்கள் மற்றும் உரிய அறிக்கைகளுடன் தவறாது சமுகமளிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பா ளர் ஆ.ராஜேந்திரன் அறிவித்துள்ளார். (ச)

## நெல்லியடியில் இன்று சிறப்பு யாகம்

(யாழ்ப்பாணம்)

உலக அமைதிக்கான சிறப்பு யாகம் இன்று பிற்பகல் 3.30மணிக்கு நெல்லியடி தடங்கன் முருகன் கோயில் கல்யாண மண்ட பத்தில் இடம்பெறும்.

ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குருஜியின் வாழும் கலை அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறும் இவ் யாகத்தை இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள அந்தண சிவாச்சாரியர்கள் நடத்தி வைப்பர். (ந)

## மோ.சைக்கிள் விபத்து வயோதிபர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் மோதியதில் கால் முறிவடைந்த நிலையில் வயோதிபர் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வியாழக் கிழமை இரவு 8மணிக்கு சாவகச்சேரி பெருங் குளத்தில் நடைபெற்றது.

இவ்விபத்தில் கண்டிவில் லேன்,தபால் கந்தோர் வீதி,சாவகச்சேரியைச் சேர்ந்த செல் லையா நமசிவாயம் (வயது 74)என்பவரே கால் முறிவடைந்து சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (எ)

## விண்ணப்பம் கோரல்

வலுவிழந்தோர் சங்கத்தின் 21வது ஆண்டு விழாவினையொட்டி மாற்று வலுவுடையோர்களி டையே போட்டிகளிற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்படி போட்டிகளில் பங்குபற்ற விரும்பு வோர் 100,ஆடியபாதம் வீதி திருநெல்வேலியில் அமைந்துள்ள எமது சங்க அலுவலகத்தில் விண் ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களிற்கு 0213217718, 077 7953578 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.விண்ணப்ப முடிபுத் திகதி 15.02. 2011 ஆகும். (ச)







**தவறிவிட்டது**

முருகமூர்த்தி வீதி, மல்வம், உடு வில் எனும் முகவரியைச் சேர்ந்த பாலரத்தினம் விஜயசாமுண்டீஸ் வரி என்பவரின் தேசிய அடை யாள அட்டை (688475198V) சிந்துஜா பாலரத்னம் என்பவரின் பாஸ்போட் (N252062) என்பன தவறிவிட்டது. கண்டெடுத்தவர் கள் ஒப்படைத்து உதவவும்.

தொடர்புக்கு:-
0773264762, 0750412487
(3593)

# இன்று ஒரு தகவல்

## பொய்

நமக்கெல்லாம் பரீட்சயமான ஒரு விடயத்தைப்பற்றி இன்றைக்கு பேசலாம் என்று நினைக்கிறேன்.

என்ன விடயமென்று கேட்கிறீர்களா?

அதுதான், பொய் சொல்வதைப் பற்றித்தான். "பொய்யில் மூன்று வகை இருக்கிறது" என்றார் ஒருத்தர்.

"என்னென்ன?" என்று கேட்டேன்.

ஒன்று பொய். இரண்டாவது புளுகு. மூன்றாவது புள்ளிவிபரம் என்றார்.

எனக்கோ அதிர்ச்சி! என்னது புள்ளிவிபரத்தையும் அதனுடன் சேர்த்து விட்டீர்களா?என்றேன்.

அதற்கு காரணம் நீங்கள் தான். ஏன் என்றால் இன்று ஒரு தகவலில் அவ்வப்போது சில புள்ளிவிபரமெல்லாம் சொல்கிறீர்களே என்றார். நான் கம்மென்றுவாயை மூடிக் கொண்டேன்.

அதற்கு மேல் அவரிடம் பேச்சுக் கொடுக்கவில்லை.

அவர் சும்மா கிண்டல் பண்ணுவதற்காக அப்படிச் சொல்லியிருக்கிறார். அதை யாரும் உண்மையென்று எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை.

பொய்யில் எத்தனை ரகம் வேண்டுமானாலும் இருந்து விட்டுப் போகட்டும்.ஆனால் இந்தக் காலத்தில் எது பொய்? எது உண்மை? என்று கண்டுபிடிப்பதே பெரும்பாடாக கிடக்கிறது.

அதை முதலில் கண்டுபிடித்தால் தானே அதை ரகம் பிரிக்க முடியும். வெளி உலகத்திலேயே இந்த நிலைமையென்றால் தவறு செய்துவிட்டு உள்ளே போகிறார்களே...

அவர்களுடைய நிலைமை எப்படியிருக்கும்?

குற்றவாளியிடமிருந்து உண்மையை வரவழைப்பதற்கு என்னென்னமோ பண்ணிப்பார்க்கிறார்கள். இருந்தாலும் அவ்வளவு பேருக்கும் தண்ணிகாட்டிவிட்டு தப்பித்துக் கொள் பவர்கள் எத்தனை பேர்?

பொய் சொல்வதைக் கண்டுபிடிப்பதற்கு புதுசா ஒரு கருவி வந்திருக்கிறதாம்.

இதன் விலை 75000 ரூபாயாம். "polygraph" என்று பெயர். சாதாரணமாக ஒருத்தன் ஒரு குற்றத்தைப் பண்ணிவிட்டு மாட்டிக் கொண்டால் அவனிடமிருந்து உண்மையை வரவழைப்பதற்கு என்ன செய்கிறார்கள்?

மிரட்டி உருட்டிப் பார்ப்பது, சித்திரவதை செய்வது, மயக்க மருந்து கொடுத்துப் பார்ப்பது போன்றவற்றின் மூலம் உண்மைகளை வரவழைக்கும் பழக்கம் பலகாலமாகவே இருந்து கொண்டிருக் கிறது.

இருந்தாலும் அதற்கெல்லாம் சட்டபூர்வமானஅங்கீகாரம் இல்லையாம். ஏனெனில் கஷ்டத்துக்குப் பயந்து கொண்டு ஒரு நிரபராதி கூட நான் தான் திருடினேன் என்று சொல்லிவிடலாம் அல்லவா! அவரே ஒத்துக் கொண்டார். அதனால் அவர் தான் திருடன் என்றுநாம் முடிவு செய்து விடமுடியுமா? அதனால் அதற்கெல்லாம் சட்ட ரீதியான அங்கீகாரம் இல்லை.

ஆனால் polygraph என்ற இந்த அறிவியல் முறைக்கு அறிவியல் ரீதியான அங்கீகாரம் உண்டாம்.

ஒருத்தரை விசாரணை செய்கிறார்கள்.அவர் அதற்குப் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார். அந்தச் சமயத்தில் அவருடைய உடம்பில் வெவ்வேறு இடங்களில் என்னென்ன மாற்றங்கள் ஏற்படுகிறது என்பதை இந்தக் கருவி காட்டிக் கொடுத்துவிடும்.

ஒரு நிஜத்திருடன் நான் அந்த 10 ஆயிரம் ரூபாயை எடுக்கவேயில்லை என்று சாதிக்கிறான்.நீ அந்தப் பணத்தை எடுத்துக் கொண்டிருந்ததை இன்னொருத்தர் ஜன்னல் வழியாக பார்த்துக் கொண்டிருந்தார் என்று சொல்கிறார்கள் விசாரணை அதிகாரிகள்.

இதைக் கேட்டவுடன் அந்தத்திருடனுக்கு உள்ளுக்குள் அதிர்ச்சி. தன்னுடைய உணர்வுகளை மறைக்க முயற்சி செய்கிறான். முடியவில்லை.தடுமாறுகிறான்.

அந்த சமயத்தில் அவனுடைய இரத்த அழுத்தம் வித்தியாசப்படுகிறது. சுவாச நிலை வித்தியாசப்படுகிறது. இதை அந்தக் கருவி மூலமாக கண்டுபிடித்து விடலாம்.

உடனே "சரி" ஆசாமி பொய்யை மறைக்க முடியாமல் தடுமாறுகிறான் என்ற முடிவுக்கு வந்துவிடலாம்.

இந்த முறையை பயன்படுத்திப் பெறப்படும் சாட்சியத்தை கூட இன்னமும் நீதிமன்றம் முழுமையாக ஏற்றுக்கொள்வதில்லையாம். தவறுதலாக நிரபராதிகள் தண்டிக்கப்படக்கூடாதென்பதில் அவ்வளவு எச்சரிக்கை.

இருந்தாலும் ஒருத்தரை விசாரிக்கும் போது ஆரம்ப நிலையில் இந்த கருவி மிகவும் உபயோகமாக இருக்கும் என்று சொல்கிறார்கள்.

எவ்வளவு தான் இருந்தாலும் பொய்யை உண்மை போல் சொல்லும் கில்லாடிகள் சிலர் உண்டு.அவர்களையெல்லாம் என்ன செய்வதென்று தெரியவில்லை. இப்பொழுதெல்லாம் பொய் சொல்வதில் போட்டி கூட வைத்திருக்கிறார்கள்.

யார் மிகப் பெரிய பொய் சொல்கிறாரோ அவருக்குப் பரிசு.

மூன்று பேர் இந்தப் போட்டியில் கலந்து கொண்டார்கள்.

முதல் ஆள் வந்தான். நான் நேற்றிரவு வானத்தை அப்படியே கையால் பிடித்து வில்லாக வளைத்து விட்டேன் என்றான்.

இரண்டாவது ஆள் வந்தான்.

நான் நேற்றிரவு மணலை அள்ளி ஒரு நீளமான கயிறாக திரித்துவிட்டேன் என்றான்.

மூன்றாவது ஆள் வந்தான்.

நீங்கள் இருவரும் சொல்வதை நான் அப்படியே நம்புகிறேன் ஏனெனில் நீங்களிருவரும் நேற்று அப்படி செய்து கொண்டிருந்ததை நான் என் இரண்டு கண்ணால் பார்த்தேன் என்றான்.

மூன்றாவது ஆளுக்கு தான் பரிசு கொடுத்தார்களாம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# 75 சுகாதாரத் தொண்டர்களுக்கு நேற்று நியமனப்பத்திரங்கள் கையளிப்பு

யாழ்.போதனா வைத்திய சாலையில் நிலவும் சிற்றூழியர் பற்றாக்குறையை தீர்க்கும் நோக்கோடு 75 சுகாதாரத் தொண்டர் களுக்கு நியமனக்கடிதங்கள் வழங்கும் நிகழ்வு யாழ். போதனா வைத்திய சாலையில் நேற்று வெள்ளிக் கிழமை நண்பகல் 11 மணி யளவில் நடைபெற்றது.

யாழ். போதனா வைத்தியசாலை பிரதிப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஸ்ரீ பவானந்தராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா கலந்து சிறப்பித்ததோடு சுகாதாரத் தொண்டர் களுக்கு நியமனக்கடிதங்களும் வழங்கினார்.

அத்துடன் இந்த நிகழ்வில் சுகாதரரரத் தொண்டர்களின் பெற்றோரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. இந் நிகழ்வில் அமைச்சர் உரை நிகழ்த்துகையில், நீண்ட காலமாக சேவையில் ஈடுபட்டவர்களுக்கு நியமனங்கள் வழங்கப் படவில்லை. ஆனால் குறுகிய காலப் பகுதியில் சேவையில் இணைந்தவர்களுக்கு நியமனங்கள் வழங் கப்பட்டதாக பல முறைப்பாடுகள் வந்துள்ளன.

நியமனங்கள் வழங்குவதில் சில தாமதங்கள் ஏற்படுகின்றனவே தவிர எவரும் புறக்கணிக்கப்பட வில்லை . அண்மையில் சுகாதார அமைச்சர் மைத் திரிபால சிறிசேன வினால் யாழ்.போதனா ்வைத்திய சாலை சுகாதாரத் தொண்டர்கள் 6 பேருக்கு நியமனங்கள் வழங்கப் பட்டன. அதன் தொடர்ச்சியாகவே நேற்று 75 பேருக்கு நியமனப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை ஏனையோருக்கு இவ்வாண்டின் நடுப்பகுதியில் நியமனப்பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

தொண்டர்களுக்கான நியமனங்கள் வழங்கப்பட வேண்டியது அவசியமானது. அதுமட்டுமன்றி நியமனங்கள் அவர்களின் வாழ்வாதாரத்திற்கு உதவியாக இருந்து வருகின்றன.

தொண்டர்கள் தமது சேவைகளை சரிவர செய்ய வேண்டும். நோயாளிகளுடனும் நோயாளிகளை பார்வையிட வருபவர்களுடனும் அன்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

அவர்களுடன் முரண்பாடுகளில் ஈடுபடுவதை தவிர்த்துக் கொள்வதோடு அத்தகைய குழப்பங்கள் ஏற்பட்டால் அது தொடர்பாக நிர்வாகத்திடம் தெரிவியுங்கள். நிர்வாகத்தினர் அதற்கானசரியானநடவடிக்கையை எடுப்பார்கள். நிர்வாகத்தினரால் உங்களுக்கு சரியான நீதி வழங்கப்படவில்லை என்றால் என்னுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

மேலும் தேர்தல் தொடர்பான பல குழப்பங்களை எதிர் கொண்டுள்ளோம். இந்தக் குழப்பங்கள் அனைத்தும் சரி செய்யப் பட்டு மீண்டும் தேர்தலுக்கு வருவோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-6)

# வாகன விபத்தில் கொரிய நாட்டுப் பிரஜை பலி

வாகன விபத்தில் கொரிய நாட்டு பெண்ணொருவர் பலியாகியுள்ளதுடன் அவரது கணவர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய ஓடுதளத்தின் பாதுகாப்பு வேலிக்கு அருகிலுள்ள வீதியில் இந்த விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

குறித்த வாகனத்தின் சாரதி கட்டுநாயக்க இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் அதேவேளை காயமடைந்த கொரிய நாட்டு பிரஜை நீர்கொழும்பு ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 220 | 250 | 180 |
| உருளைக்கிழங்கு | 55 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 300 |
| தக்காளி | 60 | 90 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 |
| கோவா | 100 | 120 | 100 |
| கரட் | 100 | 140 | 110 |
| பூசணி | 25-30 | 40 | 35 |
| புடோல் | 60 | 120 | 100 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 250-300 | 280 | 300 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 80 |
| பாகற்காய் | 150 | 160 | 150 |
| வெண்டிக்காய் | 90-100 | 140 | 90 |
| கருணைக் கிழங்கு | - | 70 | 50 |
| பயற்றங்காய் | 150 | 200 | 190 |
| லீக்ஸ் | 100 | 160 | 120 |
| பீற்றூட் | - | 140 | 140 |
| கறிமிளகாய் | - | 280 | 280 |
| போஞ்சி | 120 | 160 | 150 |
| கத்தரிதம்புள்ள | 120 | 240 | 150 |
| கீரை - 1 பிடி | 10-15 | 30 | 30 |
| தேசிக்காய் | 30-50 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 35-60 | 60 | 50 |

# இராசி பலன்

29.01.2011
(தை 15, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.30 மணிக்கு
தசமி காலை 7.41 மணிவரை
அனுசம் முற்பகல் 11.06 மணிவரை
இராகுகாலம் 9.36-11.06 மணிவரை
சுப நேரம் 3.36-5.06 மணிவரை

**மேடம்** கவலைகள் தீர கடவுளை வழிபட வேண்டிய நாள், ஒரு வேலையை முடிக்க ஒருமுறைக்கு இரு முறை அலைய நேரிடலாம், உடல் நலனில் கவனம் தேவை.

**இடபம்** குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், தொலைபேசித்தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும்.

**மிதுனம்** வியாபார விருத்தி ஏற்படும் நாள், ஆரோக்கியம் சீராகும், பழைய கடன்களை தீர்க்கும் வாய்ப்புண்டு, தொழிலில் புதிய அபிவிருத்தியை ஏற்படுத்தும் எண்ணம் உருவாகலாம்.

**கடகம்** தடைப்பட்ட காரியங்கள் கைகூடும்நாள், பிள்ளைகளால் சிறிய வருமானங்கள் வந்து சேரலாம், பிரியமான சிலரின் சந்திப்பு கிடைக்கலாம்.

**சிங்கம்** சுபசெய்திகள் வந்து சேரும் நாள், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், மாலை நேரம் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நடைபெறலாம், பெண்களால் சில உதவிகள் கிடைக்கலாம்.

**கன்னி** உயர்வான சிந்தனைகள் மனதில் குடி கொள்ளும், தொழிலில் போட்டிகளை வென்று முன்னேறுவீர்கள், உறவினர் வழியில் உதவிகள் கிடைக்கலாம்.

**துலாம்** பொருளாதார நிலை உயரும், பெரிய மனிதர்கள் வீடு தேடி வரலாம், புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் அதிகரிக்கும், தொழில் முன்னேற்றமுண்டு.

**விருச்சிகம்** உறவினர் பகை அகலும், சிந்தனை மிகுதியுண்டு, போசன சுகமுண்டு, அதிக பிரயாசையுடன் செயற்படுவீர்கள், பெரியோர் சந்திப்புண்டு.


**தனுசு** சயனசுகக் குறைவுண்டு, தொழில் வளர்ச்சிக்கு அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனை கிடைக்கும், சில காரியங்களை நிறைவேற்ற அலைய நேரிடலாம்.

**மகரம்** வாழ்வாதாரம் உயரவழிவகை செய்வீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும், பயண வாய்ப்புக்கள் கைகூடுவதற்கான அறிகுறி தோன்றும் உஷ்ண நிலையுண்டு.

**கும்பம்** புதிய திட்டங்களை வகுப்பீர்கள், தடைப்பட்ட காரியங்கள் கைகூடும், அதிகாரம் மேலோங்கும், போசனசுகமுண்டு, ஆரோக்கியம் சீராகும்.

**மீனம்** தடைகள் விலகி தனவரவு கிடைக்கும், தொழில் கூட்டாளிகள் இணக்கமாக நடந்து கொள்வர், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணைவர்.

வளவன்




யாழ்.சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நேற்று வெள்ளிக்கிழமை அதிபர் கு.விமலன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் மாணவர்களின் அணிவகுப்பு நிகழ்வையும் பரிசில் பெற்ற மாணவர்களுடன் விருந்தினர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# வீதிகள் புனரமைப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகர சபையால் சுமார் 20 இலட்சம் ரூபா செலவில் 5 வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன.

நீண்ட காலமாக புனரமைக்கப்படாத வீதிகள் விரைவில் புனரமைக்க நகர சபை நடவடிக்கை எடுத்து வருகிறது.

அதனடிப்படையில் பேச்சி அம்மன் கோவில் வீதி இரண்டரை இலட்சம் ரூபா செலவிலும் மாம்பழம் பத்தை வீதி 5 இலட்சம் ரூபா செலவிலும் தேவமாதா கோவில் வீதி மூன்றரை இலட்சம் ரூபா செலவிலும் கோணந்தீவு 5 இலட்சம் ரூபா செலவிலும் லூர்த்து மாதா கோவில் வீதி 5 இலட்சம் ரூபா செலவிலும் புனரமைப்பு செய்யப்படவுள் ளன. (ஸ்ரீ-3-10)

*****

(கரவெட்டி)

உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் செயற்றிட்டத்தில் கரவெட்டி பிரதேச சபைக்குட்பட்ட நான்கு வீதிகள் புதிதாக புனரமைக்கப்படவுள்ளதாக பிரதேச சபைச் செயலர் திருமதி அன்னலிங்கம் தியாகேஸ்வரி தெரிவித்துள்ளார்.

இவற்றில் தாமரைக்குளம் வீதி, போக்காளை துவாளிப்பிள்ளையார் கோவில் வீதி, வன்னிச்சியம்மன் கோவில் வீதி, தலையாட்டி முள்ளிவீதி ஆகிய நான்கு வீதிகளே புனரமைப்பு செய்யப்படவுள்ளன.

மேற்குறித்த வீதிகளின் புனரமைப்பு வேலைகள் ஒரு சில வாரத்தில் ஆரம்பிக்கப் படவுள்ளன. (ஸ்ரீ-3-24)




# அஞ்சலிக்கூட்டம்

இலங்கை தொழிற்சங்க ஒன்றியத்தின் வடபிரதேச முன்னாள் அமைப்பாளர் அமரர் பரராஜசேகரின் அஞ்சலிக் கூட்ட நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு ச.தியாகலிங்கம் தலைமையில் யாழ். வண்ணை நாவலர் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் தொழிற்சங்கங்களை சார்ந்தோர் அஞ்சலி உரை நிகழ்த்தவுள்ளனர். (ஸ்ரீ-9)

# வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள்

(அல்வாய்)

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல் லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மைதானத்தில் கல்லூரி அதிபர். க.தர்மலிங்கம் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக இளைப்பாறிய நில அளவை அத்தியட்சகர் கந்தையா சபாரத்தினம் கலந்து சிறப்பிக்க வுள்ளார்.சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப் பாளர் எஸ்.செல்வக்குமரன் கலந்து கொள்ளவு ள்ளார். (ஸ்ரீ-3-19)

*****

வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரி யின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி விளை யாட்டு மைதானத்தில் கல்லூரியின் அதிபர் சி.நற்குணலிங்கம் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக பருத்தித்துறை கோட்டக்கல்விப் பணிப்பாளர் பா.இரகுநாதன் கலந்து கொண்டு பரிசில் களை வழங்கி சிறப்பிக்கவுள்ளார். (ஸ்ரீ-3-19)

*****

(கரவெட்டி)

கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பி.ப 2 மணிக்கு அதிபர் இ. இராகவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு முன்னாள் கரவெட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.அம்பலவாணர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (ஸ்ரீ-3-24)

*****

(யாழ்ப்பாணம்)

யாழ். இராமநாதன் கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப்போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி.ஏ.சிவஞான சுந்தரம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் , சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் எஸ்.அண்ணாத்துரை, வலிகாமம் வலய விளையாட்டுத் துறை உதவிக் கல்விப் பணிப்பாளர் எம். நடராஜா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.கௌரவ விருந்தினராக சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இந்திக பண்டார கலந்து சிறப்பிக்க வுள்ளார். (ஸ்ரீ-2)

# மருதங்கேணியில் அபிவிருத்தி பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு

(பருத்தித்துறை)

மருதங்கேணிப் பகுதியில் அபிவிருத்தி பணிகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் 7 கோடி ரூபா செலவில் வடக்கின் மீள் எழுச்சி திட்டத்தின் கீழ் மருதங்கேணி வைத்தியசாலை விடுதி பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கட்டடம் மற்றும் உள்ளூர் வீதிகள் என்பன விரைவில் புனரமைக்கப்படவுள்ளன.

மருதங்கேணி வைத்தியசாலைக்கு இரண்டரை கோடி ரூபாவும் பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்திற்கு ஒரு கோடி ரூபாவும் அப்பகுதியில் உள்ள வீதிகள் புனரமைப்பதற்கு மூன்றரை கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது. (ஸ்ரீ-3-10)

# விளையாட்டுக் கழகங்களுக்கு பதிவிலக்கங்கள் வழங்கல்

(கரவெட்டி)

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் இவ்வாண்டு முதல் கரவெட்டி பிரதேச செயலகத்தில் பதிவு செய்த விளையாட்டுக் கழகங்களின் பதிவிலக்கங்கள் புதிதாக வழங்கப்படவுள்ளது.

எனவே விளையாட்டுக்கழகங்களின் தலைவர், செயலாளர்கள் எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறும் இவ்வாண்டுக்கான கூட்டத்தில் விளையாட்டுக்கழகங்களின் ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

அத்துடன் அன்றைய தினம் இவ்வாண்டுக்கான பிரதேச செயலக விளையாட்டுப் போட்டியின் குழு நிலைப் போட்டிக்கான அட்டவணை தயாரிக்கப்படவுள்ளது என்று கரவெட்டி பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் எஸ். அநுராகாந்தன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-24)

# இலவச மருத்துவ முகாம்

(பருத்தித்துறை)

வடமராட்சி லயன்ஸ் கழகத்தால் கர வெட்டி கட்டை வேலியார்க் கரு விநாயகர் வித்தியாலயத்தில் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு இலவச மருத்துவ முகாம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

சர்வதேச லயன்ஸ் கழகங்களின் நிதியத் தின் மாவட்ட இணைப்பாளர் மருத்துவமுகாமை ஆரம்பித்து வைத்து சிறப்புரையாற்றவுள் ளார்.

இம்முகாமில் நீரிழிவு பரிசோதனை, பொது மருத்துவ சிகிச்சை, கண்பரிசோதனை என்பன வைத்திய நிபுணர்களால் நடாத்தப் படவுள்ளன்.

எனவே இதன் மூலம் பயன்பெற விரும்புவோர் குறித்த நேரத்திற்கு முன்னர் வந்து பெயர்களைப் பதிவு செய்து சிகிச்சை பெற்று பயனடையலாம் என வடமராட்சி லயன்ஸ் கழக செயலாளர் லயன் ந.துரை ராஜா தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-3-10)

# செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி வலய ஆங்கில பாட வள நிலையத்தினால் வாய்மூல ஆங்கில வழி காட்டற் செயலமர்வு இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

அன்றைய தினம் வடமராட்சி வள நிலையத்தினால் கடந்த வருடம் நடாத்தப்பட்ட விடைத்தாள் திருத்தும் பணிக்காக ஒன்றரை மணித்தியாலம் மேலதிகமாக வழங்கப்படும் என வடமராட்சி வலய ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.சுந்தரமூர்த்தி அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

*****

வடமராட்சி வலய நட்புதவியாளர்களுக் கான மேற்பார்வை செயலமர்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யா/ வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் நடை பெறவுள்ளது.

இச்செயலமர்வுக்கு தத்தம் பாடசாலை களில் வழி காட்டலுக்கும் ஆலோசனைக்கும் பொறுப்பான ஆசிரியர் களை தவறாது அனுப் பிவைக்குமாறு வடமராட்சி வலயக் கல்விபணிப்பாளர் வ.செல்வராசா அறிவித் துள்ளார். (ஸ்ரீ-3-19)

# ஐ.நா.நிபுணர்குழு இலங்கையினால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதா ?

## பான் கீ மூனிடம் இன்னர்சிற்றி பிறஸ் கேள்வி

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் நிபுணர்குழு இலங்கை அரசாங்கத்தினால் தடுத்து நிறுத் தப்பட்டிருப்பதாக செய்திகள் வெளி யான நிலையில் இதுகுறித்து கருத் துத் தெரிவிக்குமாறு பான் கீமூனின் பேச்சாளர் அலுவலகத்திடம் இன்னர் சிற்றி பிறஸ் மீளவும் வலியுறுத் தியுள்ளது.

குறிப்பாக, கடந்த டிசம்பர் 17 இலும் எதிர்வரும் ஜனவரி 14 இலும் நிபுணர்குழுவானது இலங்கைக்குச் செல்லுமென பான் கீ மூன் அறி வித்திருந்தார்.

எனவே அதுதொடர்பாக அதனைக் கூறுவதற்காக முன்னர் பான் கீ மூன் யாருடன் உரையாடியிருந் தார் அதற்கு என்ன பதில் கூறப்பட் டது என்பது குறித்து இன் னர் சிற்றி பிறஸ் கேட்டிருந்தது.

இன்னர்சிற்றி பிறஸின் கேள் விகளுக்கு கடந்த 25 இல் ஐ.நாவின் பேச்சாளர் பதிலனுப்பியிருந்தார். அதில் ஆலோசனைக் குழுவின் பயணத்திற்கான சாத்தியப்பாடு குறித்து நீங்கள் கேள்விகளை எழுப்பியிருந்தீர்கள். அது தொடர் பாக கூறுவதற்கு பின்னரும் விடயங் களை நாம் கொண்டிருக்கிறோம்.

கலந்துரையாடல்கள் இடம் பெற்று வருகின்றன. பதிலளிக்கும் கடப்பாடு தொடர்பான பிரச்சினை குறித்து சம்பந்தப்பட்ட இலங்கைய ருடன் நிபுணர்குழு நடவடிக்கை களில் ஈடுபட விரும்புகிறது.

அந்நிலையில், பயணமானது பயன்பெறக்கூடியதாக அமையும். ஆனால், அது அத்தியாவசியமான தல்ல. செயலாளர் நாயகத்திற்கு ஆலோசனை கூறுவதற்கு அந்தப் பயணம் அத்தியாவசியமானதாக இருக்கவில்லை என அப் பதிலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

பதிலளிக்கும் கடப்பாடு தொடர் பான கேள்வியுடன் சம்பந்தப்பட்ட இலங்கையைச் சேர்ந்த தரப்பினர் களுடன் நிபுணர்குழு நடவடிக்கை களில் ஈடுபட விரும்பினால் அவர் கள் ஏன் மஹிந்த ராஜபக்ஷ மற் றும் அவரின் வெளிவிவகார அமை ச்சர் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோ ரை பேட்டி காண்பதற்கு கோரிக்கை கூட விடுத்திருக்கவில்லை. அவர் கள் இருவரும் இந்தவாரம் அமெரிக்கா வில் இருந்தார்களே என்றும் இன்னர் சிற்றி பிறஸ் கேள்வி எழுப்பியுள் ளது. முன்னதாக போரின் இறுதி நாட்களில் மோசமான போர்க்குற்றங் களும் மனித உரிமை மீறல்களும் இடம்பெற்றி ருப்பதை உறுதிப்படுத் தும் ஆதாரங்கள் வெளிவந்திருக் கின்றபோதும் இடம்பெற்றதாகக் கூறப் படும் போர்க்குற்றங்களை விசாரிப்பதற்கு இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் மறுப்புத் தெரிவித்து வருவதை கடுமையாகக் கண்டித்து சர்வதேச மனித உரிமை அமைப்பான மனித உரிமை கண் காணிப்பகம் அறிக்கை ஒன்றை விடுத்திருந்தது. போரின் இறுதிநாட் களில் இடம்பெற்றவை எவையோ அவற்றுக்கு பொறுப்புச் சொல்லும் செயற்பாட்டை முன்னெடுக்க இலங் கை மறுத்துவருவது பாதிக்கப்பட்ட மக்களை அவமானப்படுத்துவ தாகவே அமைகிறது என மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசி யாவிற்கான பிரதிப் பணிப்பாளர் பியர்சன் குறிப்பிட்டிருந்தார்.

நாட்டில் உள்ள ஊடகங்கள் மற்றும் மக்கள் அமைப்புக்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கை களில் அடிப்படையில் நோக்கு மிடத்து விடுதலைப்புலிகளுடனான போரில் நாங்கள் போர்க் குற்றங் களிலோ அன்றி மனித உரிமை மீறல்களிலோ ஈடுபடவில்லை என்று கூறும் இலங்கை அரசாங்கத்தின் வாதம் கேள்விக்குறியாகின்றது. விடுதலைப்புலிகளுக்கும் இலங் கை அரச படையினருக்கும் இடை யிலான இறுதிப்போரில் பொது மக்கள் எவரையும் அரச படையி னர் கொல்லவில்லை என அரசாங் கத்தினர் கூறுகின்றார்கள்.

போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக சர்வதேசத்தின் குரல்கள் வலுவ டைந்ததைத் தொடர்ந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றினை கடந்த மேமாதம் உருவாக்கியிருந்தார்.

போரின் இறுதியாண்டுகளில் இடம்பெற்றது என்ன என்பதை ஆராயும் பணி இவர்களுக்கு வழங் கப்பட்டது. இது வெறும் கண்துடைப்பு முயற்சியே எனக்கூறி மனித உரிமை கண்காணிப்பகம் இலங்கையினது முயற்சிகளை நிராகரித்தது.

எவ்வாறிருப்பினும் அமைக்கப் பட்டிருக்கும் இந்த ஆணைக்குழு வில் பல குறைபாடுகள் உள்ளன. ஆணைக்குழுவில் அங்கம் வகிப்ப வர்கள் பக்கச்சார்பின்றியோ அன்றி சுதந்திரமாகவோ இதுவரை செயற்பட வில்லை மற்றும் சாட்சியங்களுக் கான பாதுகாப்பு இதுவரை உறுதிப் படுத்தப்படவில்லை.

அத்துடன் இந்தச் செயற்பாட் டுக்கு மிகவும் அவசியமான அரச அதிகாரிகள் மற்றும் தொடர்புடைய இராணுவத்தளபதிகள் வாக்கு மூலங் களை மாத்திரம் ஆணைக்குழு அதிகம் நம்பி செயலாற்றுகிறது எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

தமக்கு எதிராக கருத்துக்களை முன்வைக்கும் ஊடகங்கள், மக்கள் அமைப்புக்கள் மற்றும் எதிர்த் தரப் பினரை மௌனமடையச் செய்யும் முனைப்புக்களிலும் அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது என மனித உரிமைக் கண்காணிப்பகம் குற்றம் சுமத்துகிறது.

இதன் விளைவாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் செயற்பாடு களுக்கு எதிரான கருத்துக்களை முன்வைத்து செய்திகளையும் ஆய்வு களையும் வெளியிடுவதற்கு ஊட கங்கள் தயங்குகின்றன எனவும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

பல்வேறுபட்ட உரிமைகளையும் மதித்துச் செயற்படும் ஒரு கட்டமைப் பாக இலங்கை அரசாங்கம் விரை வில் மாறும் என்ற நம்பிக்கை எமக் கில்லை எனவும் பியர்சன் அதில் தெரிவித்துள்ளார்.

போரின் போது இடம்பெற்ற மீறல்களுக்கு நீதி கிடைக்காவிட்டால் சிறுபான்மையினரது துன்ப துயர ங்கள் சரியாகத் தீர்த்து வைக்கப் படாவிட்டால், பொதுமக்களுக்கும் ஊடகங்களுக்கும் எதிரான அடக்கு முறை முடிவுக்குக் கொண்டு வரப் படாவிட்டால் இலங்கையின் அரசாட்சி தொடர்பாக மஹிந்தவும் அவரது குடும்ப அங்கத்தவர்கள் மாத்திரம் தான் மகிழ்வடைவார்கள் எனவும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட் டிருந்தது. (ஸ்ரீ-2)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள்

மழை வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட இலங்கை மக்களுக்கு தொடர் ந்தும் உதவிகள் கிடைத்த வண் ணம் உள்ளன.

இத்தாலி அரசாங்கத்தின் நிவா ரண உதவிகள் நேற்று வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

உலர் உணவுகள், நுளம்பு வலைகள் உட்பட உதவித் தொகை கள் இதில் உள்ளடங்கும்.

ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவி களை தொடர்ந்தும் வழங்கி வரு கின்றது.

இதில் நோய் நிவாரண வேலைத்திட்டமும் அடங்கும். இதற் கான வைத்தியர்களின் உதவியை வழங்க இந்தியா முன்வந்துள் ளது. (ஸ்ரீ-9)






# செயலமர்வு திகதி மாற்றம்

(யாழ்ப்பாணம்)

சிந்தனைக் கூடம் - யாழ்ப் பாணம் எனும் ஆய்வு அபிவிருத் திக்கான நிறுவனத்தால் இன்று சனிக் கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழ மையும் நடத்தவிருந்த செயலமர்வு தவிர்க்கமுடியாத காரணத்தினால் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் நடை பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசுத்துறை அரசசார்பற்ற நிறுவனங்களின் தற்கால அபிவி ருத்தித் திட்டங்களுக்கு வழி காட்டும் நோக்கில் ''யாழ்ப்பாண மாவட்டத் தின் வளங்கள், பயன்பாடு, அபிவி ருத்தி வழிமுறைகள்'' எனும் தலைப்பிலான இருநாள் செயல மர்வு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 5 ஆம்திகதி சனிக்கிழமையும் மறு நாள் ஞாயிற்றுக்கிழமையும் நாவ லர் வீதியில் அமைந்துள்ள தியாகி அறக்கொடை நிலையக் கேட்போர் கூடத் தில் நடைபெறும்.

எமது மக்களின் அபிவிருத்திப் பணி சிறக்க புலமையாளர்களும். திட்டமிடுவோரும் திட்டங்களை அமுல்படுத்துவோரும் ஒன்று கூடும் இச் செயலமர்வில் பங்கு கொள்ள விரும்புவோர் சிந்தனைக் கூட செயலமர்வின் ஏற்பாட்டாளர் பேராசிரியர் இரா. சிவச்சந்திரனுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்ப டுகிறார்கள் (ஸ்ரீ-2)

# காந்தியடிகளின் 63ஆவது சிரார்த்த தின நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

காந்தியடிகளின் 63ஆவது சிரார்த்த தின நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை அகில இலங்கை காந்தி சங்கத்தலைவர் ஆ. வடி வேல் தலைமையில் யாழ். நகரில் நடைபெறவுள்ளது. இதில் காலை 10 மணிக்கு யாழ். போதனா வைத் தியசாலைக்கு முன்பாகவுள்ள காந்தி சிலைக்கு மாலை அணி வித்து அஞ்சலி செலுத்தப்படவுள் ளது.

அதைத் தொடர்ந்து காலை 10.45 மணியளவில் இல 774, ஆஸ்பத்திரி வீதியில் அமைந் துள்ள சங்க அலுவலக மண்டபத் தில் கூட்டம் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் உலகத்தமிழ் சிற்றிதழ் சங்க விருதுபெற்ற 'காந் தீயம்' ஆசிரியர் மோ.ஷாந்தன் சத்தியமூர்த்தி, இலங்கையின் அரசி யல் பொருளாதார சிந்தனையில் காந்தீய தத்துவம் ஏற்படுத்திய தாக் கம் (1926-1976) என்ற ஆய்விற் காக முதுதத்துவ மாணிப் பட்டம் பெற்ற திருமதி பிரபாலினி தனம் ஆகியோர் பாராட்டிக் கௌரவிக்கப் படவுள்ளனர்.

இதேவேளை பருத்தித்துறை யிலுள்ள காந்தியடிகளின் சிலைக்கு சிவஸ்ரீ சோமஸ்கந்தராஜக் குருக் கள் தலைமையில் மலர்மாலையை அணிவித்து அஞ்சலி செலுத்தும் நிகழ்வும் நடைபெறும். (ஸ்ரீ-2)



யாழ்.போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் சுகாதாரத் தொண்டர்களிற்கான நியமனப் பத்திரங்கள் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் வழங்கப்பட்டது. இதில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, யாழ்.போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஸ்ரீ பவானந்தராஜா ஆகியோர் தொண்டர்களுக்கு நியமனப் பத்திரங்களை வழங்குவதையும் சுகாதாரத் தொண்டர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்கள் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

# யுத்தத்தின்போது கைவிடப்பட்ட உடைமைகளை — பார்வையிட விஸ்வமடுவில் செயலகம் —

(கொழும்பு)

கடந்த யுத்தத்தின்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் கைவிடப்பட்ட பொதுமக்களின் உடைமைகளைப் பார்வையிடவும் அப்பொருட்களை எடுத்து வரவும் விஸ்வமடுவில் செயலகம் ஒன்று செயற்பட்டு வருகிறது.

இதுவரை கிளிநொச்சி மாவட்ட மக்கள் யுத்தத்தின்போது கைவிடப்பட்ட தமது உடைமைகள் தொடர்பாக பல மைல் தூரத் தில் உள்ள முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்குச் சென்றே தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து வந்தனர்.

இதனால் , பொதுமக்கள் அதிக சிரமமடைந்து வருவதை கவனத்தில் எடுத்த அதிகாரிகள் விஸ்வமடுவில் செயலகம் ஒன்றினை ஆரம்பித்துள்ளனர்.

இப்பொருட்களை மீளப்பெற பொலிஸ் முறைப்பாட்டு பிரதி கிராம அலுவலரின் கடிதம், பிரதேச செயலர்களின் உறுதிப்படுத்தலுடன் கைவிடப்பட்ட பொருட்கள் விபரம், கைவிட்ட இடம் முதலான விபரங்கள் சத்தியக் கடதாசி மூலம் சமர்ப்பிக்கப்படவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவில் கைவிடப்பட்ட மோட்டார் சைக்கிள் தொடர்பான விபரங்களை கொழும்பிலுள்ள மோட்டார் திணைக்களம் மூலம் பெற்றுள்ள கிளிநொச்சி செயலகம் அதன் உரிமையாளர்களுக்கு கடித மூலம் 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்து வருகிறது. (ஸ்ரீ-2)

# கதகளி நடன நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதராலயம் வழங்கும் நளசரிதம் இரண்டாம்நாள் நிகழ்வில் கேரளா பி.எஸ்.வி. நாட்டிய சங்கம் நடத்தும் கதகளி நடன நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு யாழ். பல்லைக்கழக உள்ளரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு இலங்கை கலை கலாசார அமைச்சின் ஒத்துழைப்புடன் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

# பிரபாகரனின் நெருங்கிய நண்பர் கொழும்பில் கைது?

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு நெருங்கிய நண்பராக இருந்த ஒருவர் கொழும்பில் வைத்து புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்டுள்ள பிரஸ்தாப நபர் கொழும்பின் மிகப் பெரும் வர்த்தகர்களில் ஒருவராக விளங்கும் கோடீஸ்வரர் என்றும் மேலதிக தகவல்கள் தெரிவிக்கின்றன. சிறிது காலம் அவர் வெளிநாட்டிலும் வசித்துள்ளார்.

கொழும்பு -07 மற்றும் வெள்ளவத்தை பிரதேசங்களில் இரண்டு ஹோட்டல்களைக் கொண்டிருக்கும் குறித்த கோடீஸ்வரர் 12 வர்த்தக நிலையங்களுக்கும் உரிமையாளராக இருந்துள்ளார். அவரது உதவியாளராக இருந்த வேலுப்பிள்ளை சந்திரகுமார் அண்மையில் சுவிஸில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தார்.

விசாரணையின்போது அவரிடமிருந்து பெறப்பட்ட தகவல்கள் இலங்கைக்கு தெரியப்படுத்தப்பட்டதன் பேரிலேயே கொழும்பு வர்த்தகர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரே அவரைக் கைதுசெய்துள்ளனர் எனவும் குறிப்பிடப்படுகிறது.

கோடீஸ்வர வர்த்தகரும் ஒரு காலத்தில் சுவிஸில் வசித்திருந்ததுடன், அதன்பின் விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் ஆலோசனையின் பேரில் கொழும்பு திரும்பி கேந்திர முக்கியத்துவமிக்க இடங்களில் வர்த்தக நிலையங்களை பணம் கொடுத்து வாங்கியுள்ளதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ)

# புத்தளம் மாவட்டத்தில் சர்வதேச பல்கலைக்கழகம்

(கொழும்பு)

புத்தளம் மாவட்டத்தில் கருவலகஸ்வெலவில் முழுமையான சர்வதேச பல்கலைக்கழகமொன்றை விரைவில் அமைப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக சிவில் விமானசேவைகள் அமைச்சர் பிரியங்கர ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

சாலியவெல பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான குடியிருப்புத் தொகுதியை திறந்துவைத்து உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேற்படி பல்கலைக்கழகம் 1000 ஏக்கர் காணியில் உருவாக்கப்படவுள்ளதாகவும் 50ஆயிரம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மாணவர்களுக்கான வசதிகளை இது கொண்டிருக்கும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

பல்கலைக்கழக வாய்ப்புக்களை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய அமைச்சர் பிரியங்கர ஜயரட்ன, மேற்படி சர்வதேச பல்கலைக்கழகம் 3 வருடங்களுக்குள் நிர்மாணிக்கப்படும் எனவும் தெரிவித்தார். (ஸ்ரீ)

# இலங்கையின் மிக நீளமான முத்திரை வெளியீடு


(கொழும்பு)

இலங்கையின் மிக நீளமான முத்திரை எதிர்வரும் 2 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது.

கொழும்புக்கும் ரம்புக்கணைக்கும் இடையில் கடந்த 25 வருடங்களாக நீராவி இயந்திரத்தில் இயங்கும் ஆடம்பர ரயிலின் 25 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டே இம்முத்திரை வெளியிடப்படவுள்ளது.

இது 123 மில்லி மீற்றர் நீளமும் 30 மில்லி மீற்றர் அகலமும் கொண்டு இருக்கும். இவ் வைபவத்தில் வேறு நான்கு முத்திரைகளும் வெளியிடப்படவுள்ளன. (ஸ்ரீ-2)

# வயாவிளான் மகா வித்தியாலயத்துக்கு வடமாகாண ஆளுநர் விஜயம்



(யாழ்ப்பாணம்)

வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்திற்கு வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி நேற்றுமுன்தினம் காலை 9.30 மணியளவில் விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

இவ்விஜயத்தின் போது பாட சாலையிலுள்ள இருமாடிக் கட்டடம் திருத்தப்படாமல் இருப்பதைப் பார்வையிட்டார்.

இக்கட்டட திருத்த வேலைக்காக உடனடியாக 5மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்வதற்கான அனுமதியை அப்பாடசாலை அதிபர் எஸ்.கனகராஜாவிடம் வழங்கினார்.

மேலும் இவ் வேலைத்திட்டம் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினால் மேற்கொள்ளப்படவேண்டுமெனவும் கூறியதுடன், இப்பாடசாலை மாணவர்களுக்கான ஒரு சிறிய புத்தகக் கடை ஒன்றை அமைத்துத் தருவதாகவும் அதற்கான நிதியை மிக விரைவில் வழங்குவதாகவும் அவர் உறுதியளித்தார். (ஸ்ரீ-2)

# வவுனியா நகர சபையின் 16 ஆவது மாதாந்தக் கூட்டம்

வவுனியா நகர சபையின் 16 ஆவது மாதாந்தக் கூட்டம் இன்று சனிக்கிழமை வவுனியா நகர சபையின் ஒன்றுகூடல் மண்டபத்தில் நகர சபையின் தலைவர் எஸ்.என்.ஜி.நாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

கடந்த பல மாதங்களாக உறுப்பினர்களிடையேயான முரண்பாடுகள் காரணமாக சீரான முறையில் நடைபெறாத நகர சபையின் கூட்டத் தொடர் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்கள் காரணமாகவும் இதுவரை காலமும் எதிர்க்கட்சியாக செயற்பட்ட ஜனநாயக மக்கள் முன்னணியின் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து கொண்டமையினாலும் இம்முறை உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக இடம்பெற வாய்ப்புள்ளதாக வவுனியா நகர சபைக்குட்பட்ட வரியிறுப்பாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)



# பனை தென்னை வளத் தொழிற்றுறையின் அபிவிருத்திக்கு வழி பிறக்குமா?





கற்பகதருவை வடபகுதியின், வளமாகக் கொண்டிருப்பது என்றுமே சிறப்புக்குரியது. ஆனாலும் மரம் முழுவதுமே பயனுள்ளதாக இயற்கை எமக்கு வரம் அருளிய போதும் அதனை முழுவதுமாக பயன்படுத்த நாம் முயற்சிக்கவேயில்லை. இம்மரத்தையே தஞ்சமென, வாழ்வாதாரமாகக் கொண்டிருக்கும் மக்கள் வாழ்கின்ற இப் பிரதேசத்தில் அவர்களது எதிர் கால வாழ்க்கையை சிறப்பானதாகச் செப்பனிட்டுக் கொள்ள வடக்கின் வசந்தத்தினுள்ளும் பனை மரம் சார்ந்த தொழிற்றுறையின் அபிவிருத்தியும் உள்வாங்கப்பட வேண்டும் என்ற வடபகுதி மக்களின் ஆதங்கமும் எதிர்பார்ப்பும் நியாயமானதே.

இருப்பத்தோராம் நூற்றாண்டின் தொழில்நுட்ப வளர்ச்சியினை இத் தொழிற்றுறை உள்வாங்க வேண்டிய நல்லதொரு சந்தர்ப்பம் இது. பனை தென்னை சார்ந்த அபிவிருத்தியின் அவசியத்தை எங்களூர் விஞ்ஞானிகளும், ஆராய்ச்சியாளர்களும் திட்டமிடலில் பணிபுரிவோரும் இன்னும் இப்பொருட்களை நுகரவேண்டிய எங்களது மக்களனைவருமே உணர வேண்டும் என, இம்மரங்களைத் தமது வாழ்வாதாரமாக. வரிந்து கட்டிப் பல தசாப்தங்களாக வாழ்ந்து வரும் மக்கள் கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

எமது தேசத்தில் ஒரு நல்ல சமூக மாற்றத்திற்கான அறைகூவலும் இது எனக் கருதலாம்.



மூன்று தசாப்த காலங்களில் இப் பகுதிக்கான உணவுப்பொருட்கள் தொடக்கம் எமது பயன்பாட்டிற்கான அனைத்துப் பொருட்களுக்கும் பனை, தென்னை ஆகிய மரங்களிடமே தஞ்சமாக இருந்து வாழ்ந்ததை மறக்க முடியாது.

தற்போது ஏற்பட்டிருக்கும் இடர் நீங்கிய காலப்பகுதியை அபிவிருத்தி என்னும் போர்வைக்குள் உள்வாங்கப்படும் தொழிற்றுறைகளுள் பனை தென்னை சார்ந்த தொழிற்றுறை அடக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அவ்வாறு ஏற்படுமிடத்து இவ்வளங்களையும் அது சார்ந்து வாழும் மக்களைப் பாதுகாப்பதும், அபிவிருத்தி நீரோட்டத்துள் உள்வாங்கி அவர்களது வாழ்வியலை உயர்த்தி விடுவதும் எங்கள் அனைவரினதும் தலையாய கடமைகளாகும்.

வடபகுதி அபிவிருத்தி எங்களது பிரதேச வளங்களை முழுமையாக பயன்படுத்தும் அதேவேளையில் இவ்வளங்களைப் பாதுகாக்கவும் தவறிவிடக் கூடாது.

பனை வளத்துடனான அபிவிருத்திக்குள்ளே வடபகுதி மக்கள் அனைவருமே

**வடபகுதியின் பனை தென்னை வள அபிவிருத்திக்கான ஆய்வினை, மெச்சிக்கன் பல்கலைக்கழக விவசாய பீடமும், யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடமும் இணைந்து முன்னெடுக்கவுள்ளன.**

பயனுறும் வாய்ப்பு இருப்பதனால் இதனை முக்கியத்துவப்படுத்தி அதற்கான வழிகளைத் தேடவேண்டியும் இருக்கின்றது.

உள்ளூர் உற்பத்தியைப் பெருக்கி எமது பிரதேசத்தில் சுயவேலைவாய்ப்பை ஊக்குவிக்கும் நிலையில் இவ் வளம் சார்ந்த சிறுகைத்தொழில்களைப் புதிய தொழில்நுட்ப உத்திகளுக்குள் உள்வாங்க வழிசெய்திடல் வேண்டும். இதன் மூலமே வடபகுதி அபிவிருத்தி முழுமை பெறும்.

பனை மரத்தினது பொருட்களை உற்பத்திப் பொருளாக்கி அதன் மூலம் இனம் காணப்பட்ட குடிசைக் கைத்தொழில்கள், சிறுகைத்தொழில்களுடன் அவற்றிலிருந்து உற்பத்தி செய்யப்படும் பொருட்களை மதிப்பேற்றஞ் செய்து உள்ளூர் மற்றும் தென்னிலங்கை சந்தைகளில் விற்பனை செய்வதற்கும், இன்னும் தரமுயர்த்தி உலக சந்தையினுள் உள்வாங்கப்படுதலுக்கும் வழிசெய்திட வேண்டும்.

எங்களூர் விஞ்ஞானிகளுக்கும் ஆராய்ச்சியில் ஈடுபடும் பல்கலை வித்தகர்களுக்கும் பணிவான வேண்டுகோள் இது. பனை வளம்சார்ந்த பல்துறை ஆராய்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து இதனை வாழ்வாதாரமாகக் கொண்ட மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைக்க முன்வாருங்கள்.

மேலும் கள் உற்பத்திக்கான மாற்று வழியைக் கண்டுபிடித்திட்டால் எமது பகுதியில் தவறணைகளை மூடிவிட வாய்ப்பு உண்டு. தவறணைகளுக்குப் பதிலாகப் பதநீரை போத்தலிலோ அல்லது வேறு கொள்கலனிலோ அடைத்து விற்பனைக்கு விடலாம். கள்ளுத் தவறணைகளை இல்லாதொழித்தால் அது ஒரு சமூக மாற்றத்திற்கு நிச்சயமாக வழிதேடும். இந்த மாற்றம் அவசியமானதும் காலத்தின் கட்டாயமும் கூட.

இதில் ஆச்சரியம் தரும் தகவல் என்னவெனில் பண்டத்தரிப்பு பனை தென்னை அபிவிருத்தி சமாசத்தினுடைய தலைவர் திரு.குணரட்ணம் அவர்களது கூற்றுப்படி கள்ளில் இருந்து வடித்தெடுக்கும் சாராயத்தை விற்பதற்காக வருடமொன்றுக்கு 35 இலட்சம் ரூபாவை அரசாங்கத்திற்கு வரிப்பணமாக செலுத்தவேண்டி இருக்கிறது. அதுவே பதநீராகப் பெறப்பட்டால் இப்பணம் அனைத்தும் மக்களுக்கு ஆதாயமாகக் கிடைத்துவிடும். மக்களது வாழ்வியலை மேம்படுத்தவும் அவர்களது தொழிற்றுறையை முன்னேற்றவும் இப்பணம் பயன்படும்.

இன்னொரு பக்கத்தில் பதநீரை காய்ச்சிப் பெறப்படும் பனை வெல்லத்தை உருகாது அல்லது கசியாது பாதுகாக்க முடியாதிருக்கின்றது.



இவ்வாறு வெல்லம் கசியாது இருக்க வழிகண்டு பிடித்துவிட்டால் இதனை தரமானதாகச் சந்தைப்படுத்தும் வாய்ப்பு அதிகமாகிவிடும். இதில் சமாசத்தினூடாக அல்லாது தனியார், பனை வெல்லத்தினுள் கரும்புச் சீனியை கலப்பதாகவும் அறியமுடிகின்றது. இது விடயத்தில் பனை அபிவிருத்திச் சபை எடுத்துள்ள செயற்பாடுகள் மூலம் உள்ளூர் உற்பத்தியாளர்களைப் பதிவு செய்து இவ்வாறான கலப்படத்தைத் தடுக்க முடியும்.

தரமான பனை வெல்லத்தை எங்கள் ஊரில் உற்பத்தி செய்து எங்களவர் அனைவரும் பயன்படுத்த வைத்தல் போல வெளியூர் சந்தை வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.

பனையில் இருந்து பெறப்படும் நுங்கு தகரத்தில் முறைப்படி அடைக்கப்பட்டு வெளிநாட்டுச் சந்தைகளில் விற்கப்படுகின்றது. இந்த முயற்சியையும் பனம் விதைகளில் உற்பத்தியைப் பாதிக்காத வகையில் மேற்கொள்ள வேண்டும். பனைமரத்தின் ஓலை மற்றும் குருத்துக்களிலிருந்து உருவாக்கப்படும் பலவிதமான பொருட்களின் தரத்தை உயர்த்துவதுடன் அவற்றை மதிப் பேற்றஞ் செய்து சுற்றுலாப்பயணிகள் விரும்பி வாங்கிச் செல்லும் பொருட்களாக மாற்றிட வேண்டும்.

சென்ற மாதம் நடுப்பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு வருகை தந்த அமெரிக்காவில் உள்ள மெச்சிக்கன் அரச பல்கலைக்கழகத்தின் விவசாய விஞ்ஞானம் மற்றும் இயற்கை விஞ்ஞானபீடப் பேராசிரியர்கள் குழுவொன்று பண்டத்தரிப்பில் உள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கான கூட்டுறவுச் சமாசத்திற்கு வருகை தந்து, அங்கு பனை வளம் சார்ந்த பயன்பாடுகள், பிரச்சினைகள் என்பவை தலைவர் திரு.குணரட்ணம் தலைமையில் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வில் வடமாகாண பனை தென்னை கூட்டுறவுச் சமாசத்தின் பொது முகாமையாளர் திரு. சிவகுமார் அவர்களது பிரசன்னத்தில் எடுத்துக் கூறப்பட்டது.

இந்நிகழ்வில் பனையில் இருந்து தயாரிக்கப்படும் வெவ்வேறு உணவுப் பொருட்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. பனை மரத்தினை வாழ்வாதாரமாகக் கொண்டு வாழும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் அவர்களது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன் இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வழிவகைகளும் ஆராயப்பட்டன. இது விடயத்தில் மெச்சிக்கன் பல்கலைக்கழகத்தினதும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினதும் விவசாய பீடங்கள் இணைந்து ஆய்வை முன்னெடுப்பதென்றும் ஆராயப்பட்டது. பனை தென்னை வள கூட்டுறவுச் சமாசத்தின் செயற்பாடுகள் அனைத்தையும் ஆர்வத்துடன் கேட்டறிந்த பேராசிரியர்கள்குழு, இச்சமாச உறுப்பினர்களது தன்னம்பிக்கையைப் பெரிதும் வியந்து பேசியதும் குறிப்பிடத்தக்கது. பனை மரத்தில் இருந்து பெறப்படும் விதையில் இருந்து கிழங்கு பிரித்தெடுக்கும் செயன்முறையைப் பனம்பாத்தியில் கண்டு அதிசயித்தனர். பனம் பூரான், பனங்கிழங்கு என்பவற்றின் சுவையையும் அறிந்து கொண்ட பேராசிரியர்கள் குழு பனை மரத்தின் பயன்பாடுகள் பற்றி அறிந்து சென்றமையோடு அது பற்றிய ஆய்வு விடயங்களையும் கலந்தாலோசித்துச் சென்றுள்ளனர்.

விவசாயம் சார்ந்த விடயங்களில் அதிக கரிசனை கொண்டிருந்த மெச்சிக்கன் பல்கலைக்கழக பேராசிரியர் குழு பல்கலைக்கழக துணைவேந்தர் நா.சண்முகலிங்கன் அவர்களது வேண்டுதலுக்கிணங்கியே யாழ்ப்பாணம் வருகை தந்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியற் துறை,
விவசாய பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.





யாழ். புத்தூர் ஸ்ரீ பஞ்ஞசீக வித்தியாலய தரம் 1 மாணவர்களின் கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாணவர்கள் அழைத்துவரப்படுவதையும் தரம் 2 மாணவன் தரம் 1 மாணவனுக்கு சின்னம் அணிவிப்பதையும் அருகில் பிரதம விருந்தினர் வணபிதா ஆ.பேகஸ் வின்சன் அடிகளார் மற்றும் அதிபர் கு.ரவீந்திரன் ஆகியோர் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-உடுப்பிட்டி செய்தியாளர்)

## 219 புகலிட கோரிக்கையாளர்கள் மெக்ஸிக்கோவில் கைது

### இலங்கையரும் உள்ளடக்கம்

இலங்கையர்கள் உள்ளிட்ட புகலிடக் கோரிக்கையாளர்கள் மெக்ஸிக்கோவில் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ட்ரக் வண்டியொன்றில் வைத்து 219 புகலிடக் கோரிக்கையாளர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் புகலிடக் கோரிக்கையாளர்கள் கும்பலில் ஆறு இலங்கையர்களும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது. மனிதர்கள் போக்குவரத்து செய்ய முடியாத டிரெய்லர் ட்ரக் வண்டியொன்றில் இரகசியமாக இவர்கள் தப்பிச் செல்ல முயற்சித்துள்ளனர்.

இந்தக் கும்பலில் 177 ஆண்களும் 33 பெண்களும் ஒன்பது சிறுவர், சிறுமியரும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட நபர்களுக்கு மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

# உள்ளூராட்சித் தேர்தலில் ஐ.தே.க அதிக இடங்களை கைப்பற்றும்

## கரு ஐயசூரிய எம்.பி.நம்பிக்கை



(கொழும்பு) அரசாங்கத்துக்கு சாதகமாக அமைந்துள்ள அனைத்துப் பகுதிகளிலும் தேர்தலை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ள அரசாங்கம் பாதகமான பிரதேசங்களுக்கான தேர்தலை ஒத்திவைத்துள்ளது என்று தெரிவித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி எது எவ்வாறிருப்பினும் அதிகமான இடங்களைக் கைப்பற்றி புதிய நிர்வாகம் அமைக்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, உள்ளூராட்சித் தேர்தல்களின் மூலம் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. ஆனாலும், அரசாங்கத்திற்கு நல்ல செய்தியை கொடுக்கமுடியும் என்ற நம்பிக்கை அதிகரிப்பதாகவும் அக்கட்சி குறிப்பிட்டுள்ளது.

எதிர்க்கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அக்கட்சியின் பிரதித் தலைவர் கருஜெயசூரிய மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் கூறுகையில், உள்ளூராட்சி சபைத் தேர்தல்களுக்கான வேட்பு மனுத் தாக்கல் நடவடிக்கைகளை ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.

எமது வேட்பாளர்களில் திறமை மிக்கவர்கள் மற்றும் அரசாங்கத்திலிருந்து விலகியவர்கள் என அடங்குகின்றனர்.

தற்போது ஐக்கியதேசியக் கட்சி ஆதரவாளர்கள் மட்டுமன்றி அரசாங்கத்தின் ஆதரவாளர்களும் இந்தத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றிபெறச் செய்வதற்கும் மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதற்கும் முனைப்புக் காட்டி வருவதைக் காணமுடிகின்றது.

ஏனெனில், இந்நாட்டில் தற்போது மக்கள் மீது அதிகமான சுமை ஏற்றி வைக்கப்பட்டுள்ளது. மக்கள் வாழ்வதற்கு திண்டாடுகின்றனர். நல்லாட்சியோ ஜனநாயகமோ தனிமனித சுதந்திரமோ அற்றுப்போய் விட்டது. கடத்தல், காணாமல் போதல், கொலை, கொள்ளை போன்ற கலாசாரம் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது.

இவற்றுக்கு முடிவு கட்டவேண்டும் என்றும் நல்லாட்சிக்கான வழிவகைகளைச் செய்து மக்களை வாழவைப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாராகி வருகின்றது. இதற்கான பயணத்தில் அனைத்துத் தரப்பினரும் அணி திரளுமாறு கேட்கின்றோம்.

நடைபெறவிருக்கின்ற உள்ளூராட்சித் தேர்தல்கள் மூலம் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்திவிட முடியாது.

ஆனாலும் அரசாங்கத்திற்கு இடித்துரைக்கும் வகையில் பாடம் புகட்டமுடியும். மேலும் இந்தத் தேர்தல் மிகவும் அவசியமானது என்பதால் அரசாங்கத்தின் மீது அதிருப்தி கொண்டிருப்போர் மற்றும் தேர்தல்களில் இருந்து விலகியிருப்போர் என சகலரும் இந்த தேர்தலை ஒரு நல்ல சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

கிரிக்கெட் போட்டியை காரணம் காட்டி சில பகுதிகளில் தேர்தல்களை ஒத்தி வைத்துள்ள அரசாங்கம் தனக்கு சாதகமான பகுதிகளில் தேர்தல்களை நடத்துகின்றது. எப்படி இருப்பினும் நாம் எதற்கும் முகம் கொடுப்பதற்கு துணிந்துள்ளோம்.

இதற்கு நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல் நடத்தப்பட வேண்டும். இதுவரையிலும் தேர்தல்கள் ஆணையாளரின் பணிப்புரைகள் அனைத்தும் ஏட்டளவிலேயே காணப்பட்டன. அது அமுல்படுத்தப்படவோ அல்லது பின்பற்றப்படவோ இல்லை. சகல வழிகளிலும் தேர்தல் முறைகள் இடம்பெற்றன.

எனவே நடைபெறவிருக்கின்ற உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை நீதியானதும் சுதந்திரமானதுமாக நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணையாளர் பொறுப்புடன் நடந்துகொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம் என்றார். (ஸ்ரீ-2)

# நாட்டில் மதுப்பாவனை குறைந்து செல்கிறது

## கருத்துக்கணிப்பில் தகவல்

(கொழும்பு)

நாட்டில் மதுப் பாவனை, சிகரெட் பாவனை ஆகியன கணிசமான அளவில குறைந்து வருகின்றன என்று பேராதனைப் பல்கலைக் கழகத்தின் கலைப்பீட இறுதி ஆண்டு மாணவர்கள் மேற்கொண்ட கருத்துக் கணிப்பு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

குறிப்பாக, இளைஞர்கள் மத்தியில் இவை இரண்டும் புழக்கம் இழந்து வருகின்றன என்றும் விசேடங்களின்போது, மாத்திரமே இளைஞர்கள் இவற்றை பொதுவாக பயன்படுத்துகின்றனர் என்றும் கணிப்புக் கூறுகின்றது.

ஆனால், புகைப்பிடிக்க ஏற்கனவே, பழகிக் கொண்ட இளைஞர்கள் அப் பழக்கத்தை தொடர்கின்றனர் என்றும் அவதானிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் உள்ள பெண்களில் 20 சதவீதத்துக்கும் குறைவானோரே மது பாவிக்கின்றனர் என்றும் அறிய வந்துள்ளது.

மதுவை அன்றாடம் அருந்துவோர் எண்ணிக்கையும் குறைந்துள்ளது என தெரிய வந்துள்ளது. ஆனால் வைபவங்களின் போது மது அருந்துவோரின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-2)



யாழ்.நவாலி ஸ்தான அ.மி.த.க.பாடசாலையின் தரம் 1 மாணவர்களுக்கான "கால்கோள்விழா" அண்மையில்நடைபெற்றது. இந்நிகழ்வில் நவாலி இலங்கை அமெரிக்கன் மிஷன் திருச்சபையின் போதகர் வணபிதா பு.தேவதாஸ் உரையாற்றுவதையும் அதிபர் ப.விஜயகுமார் மற்றும் மாணவர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

# இத்தாலியில் இலங்கையருக்கு சொந்தமான கடையில் கொள்ளை

இலங்கையர் ஒருவரால் இத்தாலியில் நடத்தப்படும் கடை ஒன்றில் நேற்று முன்தினம் இரவு கொள்ளை சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

சுப்பர் மார்க்கெற் மூடப்படும் நேரத்தில் கைக்குட்டை ஒன்றால் முகத்தை மறைத்துக் கொண்டு வந்த ஆயுததாரி ஒருவர் துப்பாக்கி முனையில் ரொக்கப்பணத்தை கொள்ளை அடித்து உள்ளார்.

பணப்பெட்டிக்குள் இருந்த 200 அமெரிக்க டொலரை கடை உரிமையாளரை மிரட்டி இவர் கொள்ளையடித்து பின் வேகமாக ஓடி மறைந்தார்.

இவர் 30 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட ஒரு நபர் என்று பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ஸ்ரீ-2)






பரு. தட்டாதெரு மெ.மி.த.க. பாடசாலையில் தரம் ஒன்று மாணவர்களுக்கான கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் திருமதி ந.சத்தியபாமா உரையாற்றுவதையும் அருகில் பருத்தித்துறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் பா.இரகுநாதன், ஆசிரியர் ம.பங்கயன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்கள் மற்றும் பெற்றோர்களை படங்களில் காணலாம். (படங்கள்: அல்வாய் செய்தியாளர்)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஆதாரவைத்திய சாலை உளநல சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு இவ்வைத்தியசாலை உளநல சங்க அலுவலக முன்றலில் நா. கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் செயலாளரின் கூட்டறிக்கை, ஆண்டுக்கான செயற்பாட்டறிக்கை, நிதி அறிக்கை, புதிய நிர்வாக சபைத் தெரிவு ஆகிய முக்கிய விடயங்கள் இடம்பெற வுள்ளதாக இச் சங்க செயலாளர் சோ.இராசேந்திரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## சுவிற்ஸர்லாந்தில் மரணமடைந்தவரின் உறவினர்களை தொடர்புகொள்ளுமாறு கோரிக்கை

(கொழும்பு)

சுவிற்ஸர்லாந்தில் அண்மையில் மரணமடைந்த சண்முகராஜா குறிஞ்சிக்குமரன் என்பவரின் உறவினர்களை கண்டுபிடிப்பதற்கு பொதுமக்களின் உதவியை நாடுவதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சுவிற்ஸர்லாந்தை வதிவிடமாகக்கொண்ட இலங்கையரான சண்முகராஜா குறிஞ்சிக்குமரன் என்பவர் சுவிற்ஸர்லாந்து சூரிச்சிலுள்ள அவரது வசிப்பிடத்தில் கடந்த டிசம்பர்மாதம் 8ஆம்திகதி அன்று இறந்த நிலையில் காணப்பட்டார் என சூரிச் பொலிஸ் ஜெனிவாவில் உள்ள எமது தூதராலயத்துக்கு அறிவித்துள்ளது.

இறந்தவர் பிறந்த திகதி 20.07.1968 என்றும் கடவுச்சீட்டு இலக்கம்:ஆ 2176054 எனவும் மனைவியின் பெயர்: சத்தியசோதி குறிஞ்சிக்குமரன் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கை முகவரி: கைதடி மேற்கு, கைதடி , யாழ்ப்பாணம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி இறந்தவரின் நெருங்கிய உறவினர்கள் பற்றிய விபரங்களை அறிய வெளிநாட்டு அமைச்சின் கொன்ஸியூலர் விவகாரப் பிரிவு பெருமுயற்சி எடுத்துவருகின்றது.

இன்றுவரைக்கும் இறந்தவரது உறவினர்கள் எவரும் அவரது பூதவுடலைக் கோரி வரவில்லை என்பதுடன் தொடர்புகொள்ளவும் இல்லை எனக் குறிப்பிடப்படுகிறது.

இறந்த குறிஞ்சிக்குமரனின் பூதவுடலை அடையாளம் காண்பதற்காக, அவரது உறவினர்களை கண்டுபிடிப்பதற்கு வெளிநாட்டு அமைச்சு மக்களின் உதவியை நாடுகின்றது.

இறந்தவரின் உறவினர் பற்றிய விபரங்களை தெரிந்தவர்கள் கொன்ஸியூலர் விவகாரப்பிரிவு, வெளிவிவகார அமைச்சு, இல.14, சேர் பாரோன் ஜயதிலக மாவத்தை, கொழும்பு 01 என்ற முகவரி ஊடாக அல்லது 0112437635 மற்றும் 0114718972 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் ஊடாகவோ அல்லது 0112473899 என்ற தொலைநகல் இலக்கம் ஊடாகவோ அறிவிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் 15 பேரை பூசாவில் தடுத்து வைத்து விசாரிக்க அனுமதி

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் பதினைந்து பேரை பூசா தடுப்பு முகாமில் தடுத்து வைத்து விசாரிக்க கொழும்பு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இறுதிக்கட்ட யுத்தத்தின் பின் நாட்டின் பல பகுதிகளிலும் மறைந்திருந்த நிலையில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் விசேட அணியினர் மேற்கொண்ட புலன் விசாரணைகளின் மூலம் அவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் குண்டுத்தாக்குதல் சம்பவங்கள் உள்ளிட்ட பல கடும் குற்றங்களுடன் தொடர்புடையவர்களாக இனம் காணப்பட்டுள்ள பதினைந்து பேரையே அவ்வாறு பூசாவில் தடுத்து வைத்து விசாரிக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

அத்துடன் அவர்களுக்கெதிரான விசாரணைகள் தொடர்பான அறிக்கையொன்றை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## மிதிவெடியகற்றும் பணியாளர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

மிதிவெடிகளை அகற்றும் பணிகளில் ஏற்கனவே ஈடுபட்டிருந்த மற்றும் தற்போது ஈடுபட்டு வரும் பணியாளர்களுக்கான விசேட கலந்துரையாடலொன்று இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். குடாநாட்டில் மீள் குடியேற்ற நடவடிக்கைகளை துரிதப்படுத்தி அதனை ஆக்க பூர்வமான செயற்பாடுகளாக்கும் நோக்கத்துடன் இடம்பெறவுள்ள இக் கலந்துரையாடலில் ஏற்கனவே மிதிவெடிகளை அகற்றும் பணிகளில் ஈடுபட்டு தற்போது பணியில் இல்லாதவர்களும் தற்போது மிதிவெடிகளை அகற்றும் பணிகளில் ஈடுபட்டு வருவோரும் கலந்து கொள்ளலாம்.

இப்பணியாளர்களது நலன் கருதிய திட்டங்கள் குறித்து ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதும் இக் கலந்துரையாடலின் எதிர்பார்ப்பாகும்.

எனவே இக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளும்படி மேற்படி பணியாளர்கள் அனைவரும் கேட்கப்படுகின்றனர். (ஸ்ரீ-2)

## கவிதை நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

செல்வநாயகம் அருமைத்துரை கயல்விழி எழுதிய 'உப்புக் காற்றில் மலர்ந்த மலர்கள்' கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை மாலை 3 மணிக்கு இன்பர்சிட்டி பொது நோக்கு மண்டபத்தில் இன்பர்சிட்டி க.கூ.சங்க தலைவரும் சமாதான நீதவானுமான வே.விசுவலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக இலக்கிய ஆய்வாளர் இ.து. குலசிங்கம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

வெளியீட்டுரையை இ.து. குலசிங்கம் ஆற்ற முதற்பிரதியை வடமாகாண கராத்தே சங்கத் தலைவரும் யோகாப்பயிற்சி ஆசிரியருமான ம.இரத்தினசோதி பெற்றுக் கொள்வார். (ஸ்ரீ-9)




★1595 - ஷேக்ஸ்பியரின் ரோமியோவும் ஜூலியட்டும் நாடகம் முதன் முதலாக அரங்கேறியது.

★1676 - மூன்றாம் பியோதர் ரஷ்யாவின் மன்னனாக முடி சூடினான்.

★1814 - நெப்போலியன் பொனபார்ட்டின் பிரெஞ்சு இராணுவம் பிரியென் நகரில் இடம்பெற்ற சமரில் ரஷ்யாவை வெற்றி பெற்றது.

★1819 - ஸ்டாம்ஃபோர்ட் ராபில்ஸ் சிங்கப்பூரில் தரையிறங்கினார்.

★1861 - கான்சஸ் ஐக்கிய அமெரிக்காவின் 34ஆவது மாநிலமாக இணைந்தது.

★1863- ஐக்கிய அமெரிக்காவின் இராகோ மாநிலத்தில் பெயார் ஆற்றருகில் இராணுவத்தினருக்கும் ஷோஷோன் பழங்குடிகளுக்கும் இடையில் இடம்பெற்ற சமரில் பல நூற்றுக்கணக்கான பழங்குடிகள் படுகொலை செய்யப்பட்டனர்.

★1886 - ஜேர்மனியரான கார்ல் பென்ஸ் பெற்றோலினால் இயங்கும் முதலாவது தானுந்துக்கான காப்புரிமம் பெற்றார்.

★1916 - முதலாம் உலகப் போர்: பாரிஸ் ஜேர்மனியரின் குண்டுத் தாக்குதலுக்கு இலக்கானது.

★1929 - சோவியத் ஒன்றியத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட லியோன் ட்ரொட்ஸ்கி துருக்கியை அடைந்தார்.

★1940 - ஜப்பான், ஒசாக்காவில் தொழிலாளர்களை ஏற்றிச் சென்ற தொடருந்து ஒன்று வெடித்ததில் 181 பேர் கொல்லப்பட்டனர்.

★1944 - இரண்டாம் உலகப் போர்: போலந்தில் கொனியூச்சி என்ற இடத்தில் சோவியத் துணை இராணுவத்தினரினால் பெண்கள், குழந்தைகள் உட்பட கிட்டத்தட்ட 38 பேர் கொல்லப்பட்டனர்.

★1946 - ஐக்கிய அமெரிக்காவில் CIG எனப்படும் மத்திய உளவுத்துறை குரூப் (Central Intelligence Group) அமைக்கப்பட்டது.

★1996 - இத்தாலியில் வெனிஸ் நகரில் உள்ள ஒப்பரா மாளிகையான லாஃபெனீஸ் தீயினால் அழிந்தது.

★2005 - சீனாவின் பெருநிலப்பரப்பில் இருந்து 1949ஆம் ஆண்டிற்குப் பின்னர் முதற்தடவையாக வர்த்தக விமானம் ஒன்று தாய்வானுக்கு வந்து சேர்ந்தது.

### பிறப்புகள்

★1860 - ஆன்டன் செகொவ், ரஷ்ய எழுத்தாளர் (இ. 1904)

★1866 - ரொமெயின் ரோலண்ட், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர் (இ. 1944)

★1926 - அப்துஸ் சலாம், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர் (இ. 1996)

★1970 - ராஜ்யவர்தன் சிங் ரத்தோர், இந்திய ஒலிம்பிக் வீரர்

### இறப்புகள்

★1934 - பிரிட்ஸ் ஹேபர், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனிய வேதியியலாளர் (பி. 1868)

★1963 - றொபேட் புறொஸ்ட், அமெரிக்கக் கவிஞர் (பி. 1874)

★1981 - பாலகிருஷ்ணன், நாதஸ்வரக் கலைஞர் (பி. 1945)

★1998 - பி.எஸ்.பி. பொன்னுசாமி, இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (பி. 1908)

# இயற்கையிடம் கற்றுக்கொள்ளுங்கள்!

சாலைகள் கூடும் இடத்தில் சில நிமிடங்கள் நில்லுங்கள். உங்களைக் கடந்து செல்பவர்களைக் கவனியுங்கள். எத்தனை முகங்கள் சந்தோசமாக இருக்கின்றன? நூறு பேர் கடந்து போனால், அதில் நான்கோ, ஐந்தோ முகங்களில்தான் சிரிப்பிருக்கிறது. அவர்களும் இளைஞர்களாகத்தான் இருக்கிறார்கள். மற்றவர்கள் ஏதோ வாழ்க்கையையே தொலைத்து விட்டவர்கள் போல் தெரிகிறார்கள். ஏன் இப்படி?

வெளியே எதற்குப் போக வேண்டும்? உங்களையே கண்ணாடியில் பாருங்களேன்... உங்கள் முகத்தில் ஆனந்தமும் கொண்டாட்டமும் தெரிகிறதா? அல்லது சிரிப்பை வற்புறுத்தி அழைத்து வரவேண்டியிருக்கிறதா?

உங்களுடைய ஐந்து வயதில் ஒரு பட்டாம்பூச்சியைத் துரத்திக் கொண்டு ஓடினீர்களே, ஞாபகம் இருக்கிறதா? அந்தப் பட்டாம்பூச்சியைத் தொட்ட



தும் அதன் வண்ணங்கள் உங்கள் கையில் பளபளவென்று ஒட்டிக் கொண்டபோது, அதைவிட உலகில் பெரிதாக எதுவுமே தெரியவில்லையே. அப்போது எப்படிப் பொங்கிப் பொங்கி ஆனந்தமாய் இருந்தீர்கள்? ஐந்து வயதில் உங்கள் உயரம் என்ன, இப்போது உங்கள் உயரம் என்ன? உங்கள் சந்தோசமும் குறைந்தபட்சம் அதேவிகிதத்தில் வளர்ந்திருக்க வேண்டாமா?

கள்ளங் கபடமற்ற அந்தச் சிறு வயதில் சந்தோசத்தைத் தவிர வேறு எதுவுமே நீங்கள் அறியவில்லை. பிறகு என்ன ஆனது? நீங்கள் வளர்ந்திருந்தீர்கள். சந்தோசமாக இருக்கப் பல விஷயங்களைத் தேடித் தேடிச் சேகரித்தீர்கள். பெரிய படிப்பு, கொம்பியூட்டர், சொந்த வீடு, மோட்டார் சைக்கிள், கார், கிரடிட் கார்ட், ரீ.வி, டீ.வி.டீ, ஏ.சி, செல்போன் என அவரவர் முயற்சிகளுக்கு ஏற்ப எவ்வளவு வசதிகள் சேர்த்துவிட்டீர்கள்? சில நூற்றாண்டுகளுக்கு முன், உலகையே வெறுத்து விட்டதாக நினைத்த பேரரசர்களுக்குக்கூட இத்தனை வசதிகள் இருந்ததில்லை தெரியுமா?

ஆனால், என்ன ஆனது? சந்தோசத்திற்காக வாழ்க்கையில் இவ்வளவு தேடிய நீங்கள், கடைசியில் உங்கள் சந்தோசத்தை மட்டும் தொலைத்துவிட்டீர்கள். எங்கே போயிற்று உங்கள் சந்தோசமெல்லாம்?

ஒருமுறை மூச்சுமுட்டக் குடித்துவிட்டுச் சங்கரன் பிள்ளை பஸ் தரிப்பிடத்தில் நின்றிருந்தார். வந்த பஸ்ஸில் கூட்டம் பிதுங்கி வழிந்தது. எப்படியோ முண்டியடித்து அதில் ஏறிவிட்டார். பத்து பதினைந்து பேர் காலை மிதித்து, நான்கைந்து பேரை முழங்கையால் நெட்டித் தள்ளி உள்ளே நகர்ந்தார்.

ஒரு மூதாட்டிக்குப் பக்கத்து இருக்கையில் இருந்தவர் எழுந்திருப்பதைப் பார்த்ததும், சங்கரன் பிள்ளை பலரையும் இடித்துத் தள்ளிப் பாய்ந்தார். குடிகாரனோடு மல்லுக்கு நிற்க வேண்டாமே என்று அவர்கள் முகச்சுழிப்புடன் ஒதுங்கி, வழிவிட்டார்கள். சங்கரன் பிள்ளை பெருமிதத்தோடு அந்த இருக்கையில் தொப்பென அமர்ந்தார். உட்கார்ந்த வேகத்தில் அந்த மூதாட்டியின் மீது சரிந்தார். அவள் மடியில் வைத்திருந்த பழக்கூடை உருண்டோடியது. கோபத்தோடு அவரைப் பார்த்த மூதாட்டி, "நீ நேரே நரகத்துக்குத்தான் போய்ச் சேரப் போகிறாய்" என்று ஆத்திரத்தோடு சொன்னார்.

சங்கரன் பிள்ளை பதறியடித்து எழுந்தார். "ஹோல்டான், ஹோல்டான் வண்டியை நிறுத்துங்கள். நான் போக வேண்டியது காந்தி நகருக்கு. தப்பான வண்டியில் ஏறிவிட்டேன்" என்று கத்தினார்.

உங்களில் பலர் இப்படித்தான் எந்த பஸ்ஸில் ஏறியிருக்கிறோம் என்பதே தெரியாமல் ஏறுவதும் இறங்குவதுமாக அல்லாடிக்கொண்டு இருக்கிறீர்கள்.

ஆசைப்பட்டது கிடைக்காதபோது, சோகத்தில் முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்வதே முட்டாள்தனம். ஆசைப்பட்டது கிடைத்த பிறகும், ஏன் முழுமையாகச் சந்தோஷத்தை அனுபவிக்கத் தெரியாமல் தவிக்கிறீர்கள்?

இயற்கையிடமிருந்து நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டிய விஷயங்கள் நிறைய இருக்கின்றன.

தென்னை மரத்தைக் கவனியுங்கள். உங்கள் தோட்டத்தில் நெடுநெடுவென வளர்ந்திருக்கிறது. சுவையான தேங்காய்களை வழங்கிக்கொண்டு இருக்கிறது. மற்ற மரங்களை வெட்டிப் போடும் நேரத்திலும், தென்னையை வெட்ட உங்களுக்கு மனசு வராது. அதற்குத் தண்ணீர் ஊற்றிக் கவனித்துக் கொள்வீர்கள். ஆனால், உங்களிடமிருந்து தண்ணீரை எதிர்பார்த்தா அது தேங்காய்களைச் சுமக்கிறது?

அதன் இயல்பு என்னவோ, நூறு சதவீதம் அந்த இயல்புப்படி நடக்கிறது. அதற்குக் கிடைக்க வேண்டிய தண்ணீர் தானாகக் கிடைத்தும் விடுகிறது.

இயல்பு... அதை ஒட்டிய செயல்... அதற்கான பலன் என்பதுதான் இயற்கை வகுத்துள்ள நியதி.

ஆனால் நீங்கள்?

உங்களுக்குச் சச்சின் போல் கிரிக்கெட் ஆடவேண்டும்; ஐஸ்வர்யா ராயைப் போல் அழகாக வேண்டும்; பில்கேட்ஸ் போல் பணக்காரராக வேண்டும்; இந்த மாதிரி ஒரு பங்களா; அந்த மாதிரி ஒரு கார்; அவரைப் போல்



## ஆன்மீகம் 03

ஒரு வாழ்க்கை; இவரைப் போல் செல்வாக்கு... இப்படிப் பலனை முதலில் தீர்மானித்தீர்கள். அதை எதிர்பார்த்துச் செயலில் இறங்கினீர்கள். அது உங்களுக்குச் சரி வருமோ இல்லையோ, அதை உங்கள் இயல்பாக்கிக் கொள்ளப் பார்க்கிறீர்கள்.

இப்படி அடுத்தவரைப் பார்த்து, அதேபோல் உங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முயற்சி செய்யும் போது, வாழ்க்கை நரகமாகிப் போகும். ஆம்... உங்கள் இயல்பைப் புரிந்து கொள்ளாமல், எதிர்த்திசையில் துடுப்புப் போடுவதுதான் அத்தனை துன்பங்களுக்கும் காரணமே தவிர -

உங்கள் அடிப்படை ஆசை குற்ற மல்ல!

உங்களுடைய இயல்பு என்ன? அதை நீங்கள் எப்படிப் புரிந்து கொள்வது?

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# ஆத்திசூடி: ஔவையார் - பாரதி - முருகையன் ஒரு கருத்தியல் ரீதியான ஒப்பாய்வு 02

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப் பட்ட ஆய்வுக்கட்டுரை"**

**ஆத்திசூடியில் சமூக நீதி**

ஒரு அற இலக்கியம் சமூக நீதி பற்றிப் பேசும் என்பதில் எவ்வித புதுமையும் இல்லை. ஆனால் ஒரேவகை இலக்கிய வடிவம் அதனைப் பாடும் போது பாடுபவர் சார்ந்த கருத்தியலும் காலத்தின் செவ்வாக்கும் பொருளில் புதுமைகளையும் மாற்றங்களையும் கொண்டு வரும். ஔவையார் கூறும் சமூக நீதிகளில்,

*"ஒப்புர ஒழுகு"*
*"தேசத்தோடொத்து வாழ்"*
*"நாடொப்பன செய்"*

என்று வரும் வரிகள் ஒப்புரவின் பெருமையைப் பேசுகின்றன. உலகின் போக்கறிந்து அதனுடன் ஒத்தியங்குதல் பிரதான அறம் என்பதை இவை உணர்த்துகின்றன.

*"நுப்போல் வளை"* என்பது நெகிழ்ச்சித் தன்மையுடன் நிலைத்து வாழ்வதைக் கூறுகிறது. எதையும் சீர்தூக்கிப் பார்த்தல் வேண்டும் என்பதை "தூக்கி வினைசெய்" என்பது உணர்த்துகின்றது.

ஔவையார் கூறும் இந்த ஒப்புரவு, நெகிழ்ச்சித்தன்மை, சீர்தூக்குதல் போன்ற சமூக நீதிக் கருத்துக்கள் பாரதியாரின் புதிய ஆத்திசூடியில் வேறொரு வடிவில் கூறப்படுகிறது. அதாவது,

*"சேர்க்கை அழியேல்"*
*"ஒற்றுமை வலிமையாம்"*

என்று ஒருமைப் பாட்டினை வலியுறுத்தும் பாரதி,

*"கொடுமையை எதிர்த்துநில்"*
*"வருவதை மகிழ்ந்துண்"*
*"தூற்றுதல் ஒழி"*
*"பொய்மை இகழ்"*
*"நன்று கருது"*

என்று தனது சிந்தனையின் எல்லையை விரிவுபடுத்துகின்றார். பொய்யை இகழ்ந்து, வருவதை மகிழ்ந்துண்டு, பிறரைத் தூற்றுவதை ஒழித்து, எண்ணும்போதெல்லாம் நல்லதை எண்ணி வாழும் போதே சமூக நீதியை உண்டாக்க முடியும் என்பது பாரதியின் கருத்து.

பாரதியின் வாழ்நிலை அனுபவம் இவற்றைத் தந்திருக்கலாம்.

முருகையன் சமூகநீதி பற்றிக் கூறும் கருத்து பொதுவுடமை சிந்தனையின் வெளிப்பாடாகத் தோன்றுகின்றது. சாதி எதிர்ப்பு, சமத்துவம், சுரண்டலை எதிர்த்தல், சொத்தின் பகிர்தல், வலுவற்றதை வலுவாக்கல், உலகத்தைச் சீர்திருத்தல், கொடுமையை எதிர்த்து நீதியை நிலைநாட்டுதல், அன்பின் பொதுமை என்பன தொடர்பாக முன்னைய இருவரிலும் சற்றுத் தீவிரமாக சிந்திக்கின்றார்.

*"ஒற்றுமை நல்லது*
*கூடி உழைத்திடு*
*சமன் செய விரும்பு*
*சாதிகள் வேண்டாம்*
*சிவப்பது சிறப்பு*
*சுறண்டலைச் சகியேல்*
*செல்வம் பகிர்ந்துகொள்.*
*சொத்துக்கள் பொதுமைசெய்*
*நொய்யது நையும்*
*நாங்கள் மனிதர்*
*மாற்றுக உலகை*
*நீதியை நிறுவு*
*தூள் செய் கொடுமையை*
*மூழ்குக அன்பிலே"*

என்ற வரிகளில் ஏற்றத்தாழ்வில்லாத ஒரு சமூகத்தை நிலைநாட்டுவதற்கு என்ன செய்யலாம் என்பது தொடர்பாகத் தனது கொள்கைகளை வெளிக்கொண்டு வருகின்றார். "சிவப்பது சிறப்பு" என்பது இவ்வரிகளில் சிந்தனைக்குரியது.

**ஆத்திசூடியில் அறிவுத்தேடல்**

அற இலக்கியங்கள் நூல் பயிற்சிக்கும் அறிவுத் தேடலுக்கும் முதன்மையளிக்கின்றன. கல்வி, சான்றோர் பெருமை, கற்றாரின் உறவு என்பன பற்றி அதிகமாகப் பாடுகின்றன. மனிதப் பண்பாட்டின் விருத்திக்கான சாதனமாக இதனை வகுத்துக் கூறுகின்றன. ஔவை,

*"எண்ணெழுத்து இகழேல்*
*ஓதுவது ஒழியேல்*
*இளமையிற் கல்*
*கேள்வி முயல்*
*சான்றோர் இனத்திரு*
*நூல் பல கல்*
*மேன்மக்கள் சொற்கேள்"*



என்று கூறும் வரிகளில் கற்றறிந்தாரை மேன்மக்கள் என்று கூறுவதனை கவனித்தல் வேண்டும். இது *"சீரியர் கெட்டாலும் சீரியரே"* என்ற அவரின் மிகைக் கூற்றுடன் ஒருங்கு வைத்து நோக்கத்தக்கது.

(தொடரும்)

இ.இராஜேஸ்கண்ணன்
விரிவுரையாளர்
சமூகவியல்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

# எகிப்து ஜனாதிபதிக்கு எதிராக ஐ.நா.வின் முன்னாள் அதிகாரி தலைமையில் போராட்டம்

எகிப்து நாட்டில் 30 ஆண்டுகாலமாக ஆட்சி செய்து வரும் முபாரக்குக்கு எதிர்ப்பு தெரிவித்து நடந்து வரும் போராட்டத்திற்கு ஐ.நா சபை முன்னாள் அதிகாரி தலைமை தாங்கி நடத்த இருக்கிறார். போராட்டம் சூடு பிடித்து உள்ளதால் முபாரக்கின் மகன் குடும்பத்துடன் வெளிநாட்டுக்கு தப்பிச் சென்றுள்ளார்.

எகிப்து நாட்டில் கடந்த 30 ஆண்டுகளாக ஜனாதிபதியாக இருப்பவர் ஹோசினி முபாரக். இவர் ஆட்சியில் பொருளாதாரம் சீர்குலைந்து போனது. மக்கள் மிகவும் கஷ்டப்பட்டனர். வேலை இல்லாத் திண்டாட்டம், விலைவாசி உயர்வு காரணமாக ஆட்சி மீது வெறுப்பு அடைந்தனர். ஜனாதிபதி முபாரக் ஆட்சியை விட்டு விலக வேண்டும் என்றும் புதிய சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட வேண்டும் என்றும் கோரி மக்கள் போராட்டத்தில் குதித்தனர். ஆபிரிக்காவில் உள்ள துனிசியாவில் மக்கள் சர்வாதிகாரி பென் அலி ஆட்சிக்கு எதிராக போராட்டம் நடத்தி அவரை நாட்டை விட்டு வெளியேற்றினார்கள். அந்த நாட்டு மக்களுக்கு கிடைத்த வெற்றி தான் எகிப்திய மக்களையும் போராட தூண்டியது.

இந்த போராட்டத்துக்கு மக்கள் தாமாக முன்வந்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். ஒரு தலைவர் இல்லாமல் இந்த போராட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை வெடித்தது.

2 ஆவது நாளாக புதன்கிழமை நடந்த போராட்டத்தில் பொலிஸ் அடக்குமுறை அதிகமாக இருந்தது. கண்ணீர் புகைக்குண்டுகளை வீசிய பொலிசார் மீது கற்களை வீசித் தாக்கினார்கள். இதனால் வெடித்த வன்முறைச் சம்பவங்கள் காரணமாக 3 ஆர்ப்பாட்டக்காரர்கள் பலியானார்கள். ஒரு பொலிஸ்காரர் இறந்தார். போராட்டத்தில் ஈடுபட்ட ஆயிரத்து 200 பேரை பொலிசார் கைது செய்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் 3 ஆவது நாளாக போராட்டம் கெய்ரோ மற்றும் சூயஸ் ஆகிய நகரங்களில் நடந்தது. மக்கள் திரண்டு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். அரசாங்க கட்டடங்கள் மீது கற்களை வீசினார்கள். பிரதான வீதிகளின் மையத்தில் டயர்களை போட்டு கொளுத்தினார்கள்.

போராட்டம் சூடு பிடித்து வருவதால் முபாரக்கின் இளைய மகனும் முபாரக்கின் அரசியல் வாரிசும் அடுத்த ஜனாதிபதி என்று கருதப்பட்டவருமான கமால் முபாரக் பயந்து போய் தன் மனைவி மகளுடன் 100 க்கும் மேற்பட்ட லக்கேஜ்களுடன் நாட்டை விட்டு விமானம் ஏறி பறந்து விட்டனர். அவர் இங்கிலாந்து நாட்டுக்கு சென்று விட்டார்.



இந்நிலையில் ஐ.நா.வின் அணுசக்தி கண்காணிப்பு குழு முன்னாள்தலைவரும் அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவருமான எல்பராட் தான் எகிப்தில் சீர்திருத்தம் வேண்டும் என்று பேசியும் எழுதியும் வந்தார். அவர் வியன்னாவில் வசித்து வந்தார். போராட்டத்திற்கு தலைமை தாங்குவதற்காக எகிப்து நாட்டுக்கு திரும்ப இருக்கிறார். இதுவரை தலைமை இல்லாமல் தவிக்கும் போராட்டத்தை இவர் தலைமை தாங்கி நடத்துகிறார். முபாரக்கின் ஆட்சியை மக்கள் இனியும் பொறுத்துக் கொள்ளமாட் டார்கள் என்று எல்பராடே அறிவித்துள்ளார்.

வாராந்த பிரார்த்னை கூட்டத்துக்கு பின்னர் மிகப்பெரிய அளவில் ஆர்ப்பாட்டம் நடத்தவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் திட்டமிட்டு உள்ளனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் பேஸ்புக், டுவிட்டர் இணையத்தளங்கள் மூலம் ஒருங்கிணைப்புகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2)

## ஜனாதிபதிக்காக நிதி திரட்டிய எம்.பி.க்கள்

இந்தோனேசிய ஜனாதிபதி சுசிலோ பாம்பாங் யுதோயோனோ கடந்த 7 ஆண்டுகளாக இந்தப் பதவியில் இருக்கிறார். பதவிக்கு வந்து 7 ஆண்டுகள் ஆகியும் ஒருமுறை கூட சம்பள உயர்வு பெறவில்லை என்று தெரிவித்தார். இதற்காக எம்.பி.க்கள் சேர்ந்து அவருக்காக நிதி திரட்டுவது என்று தீர்மானித்தனர். இதற்காக பாராளுமன்ற கட்டடத்தில் வெளிப்படையாகத் தெரியும் அளவுக்கு ஒரு பெட்டியை வைத்து நிதி திரட்டி வருகிறார்கள். இதில் பெரியளவில் நிதி சேரவில்லை. வெறும் நாணயங்களே சேர்ந்துள்ளன.

அந்த நாட்டில் ஜனாதிபதியின் மாதச் சம்பளம் 3 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாய் ஆகும். மத்திய வங்கி ஆளுநரின் சம்பளம் இவரது சம்பளத்தை விட 4 மடங்கு அதிகமாகும். (ஸ்ரீ)

# துனிசியா, எகிப்தை தொடர்ந்து ஏமனிலும் ஜனாதிபதிக்கு எதிராக போராட்டம்

## இலட்சக்கணக்கானோர் திரண்டனர்



(சனா)

ஏமன் நாட்டில் ஜனாதிபதியை பதவி விலகக் கோரி எதிர்க்கட்சியினரும் இளைஞர் அமைப்புகளும் போராட்டத்தில் குதித்துள்ளன. இப்போராட்டத்தில் இலட்சக்கணக்கானோர் திரண்டனர். துனிசியாவில் ஜனாதிபதி அபிதின் பென் அலியை பதவி விலகக் கோரி நடந்த போராட்டத்தின் காரணமாக அவர் தலைமறைவாகி சவுதியில் தஞ்சம் புகுந்தார். அங்கு நடந்த போராட்டம் வெற்றியடைந்ததால் தற்போது எகிப்திலும் ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக்குக்கு எதிராக போராட்டம் வெடித்துள்ளது. தற்போது இந்த போராட்டம் ஏமனையும் தொற்றிக் கொண்டுள்ளது.

ஏமன் நாட்டு ஜனாதிபதி அல் அப்துல்லா சலே 32 ஆண்டு காலமாக ஆட்சியில் உள்ளார். இவரது பதவிக்காலம் 2013 இல் முடிவடைகிறது. அதற்குள் தன்னுடைய மகனை ஜனாதிபதியாக்க முயற்சி செய்து வருவதாக எதிர்க்கட்சியினர் குற்றம் சாட்டி வருகின்றனர். ஏமன் நாட்டின் மக்கள் தொகையில் அரைவாசிப்பேர் வறுமைக்கோட்டுக்கு கீழ் தான் வசிக்கின்றனர். வீதி வசதி, சுகாதார வசதி ஏதும் இல்லாததால் வெகுண்டெழுந்த இளைஞர்களும், எதிர்க்கட்சியினரும் தற்போது ஜனாதிபதி அப்துல்லா சலேயை பதவி விலகக் கோரி தலைநகர் சனாவில் முற்றுகை போராட்டம் நடத்தி வருகின்றனர். ஜனாதிபதி பதவி விலகுவதைத் தவிர வேறு எந்த சமாதானத்தையும் நாங்கள் ஏற்க தயாராக இல்லை என போராட்டக்காரர்கள் திட்டவட்டமாக அறிவித்துள்ளனர். (ஸ்ரீ)

# விக்கிலீக்ஸால் சர்வதேச உறவுகள் வலு பெற்றுள்ளன


## ரஷ்ய ஜனாதிபதி தெரிவிப்பு

விக்கிலீக்ஸின் காட்டிக்கொடுக்கும் இணையத்தளத்தினால் சர்வதேச உறவுகள் மேலும் வலுப்பெற்றுள்ளன என்று ரஷ்ய ஜனாதிபதி டிமிட்ரி மெட்வடேவ் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு விக்கிலீக்ஸ் இணையத்தளம் ஈராக், ஆப்கான் ஆகிய நாடுகளுடனான அமெரிக்காவின், போர் குறித்த இரகசிய ஆவணங்களை வெளியிட்டு உலகம் முழுவதும் பரபரப்பை உண்டாக்கியது. இதன் நிறுவுநர் ஜூலியன் அசேஞ்ச் சர்வதேச அளவில் பிரபலமானார். இந்நிலையில் சுவிற்ஸர்லாந்தில் டாவோஸ் நகரில் உலக பொருளாதார மாநாடு நடந்து வருகிறது.

இதில் கலந்து கொண்டு பேசிய ரஷ்ய ஜனாதிபதி டிமிட்ரி மெட்வடேவ் கூறியதாவது, விக்கிலீக்ஸ் இணையத்தளம் வெளியிட்ட இரகசிய ஆவணங்களால் சில நாடுகள் கடும் விமர்சனம் செய்து வருகின்றன. ஆனால் விக்கிலீக்ஸினால் சர்வதேச உறவுகள் வலுப்பெற்றுள்ளன.

இது சர்வதேச அளவில் பொது அரசியல் தளமாக விக்கிலீக்ஸ் உள்ளது. இன்று பலகோடி மக்கள் இணையத்தளத்தினைப் பயன்படுத்துகின்றனர். அந்தவகையில் விக்கிலீக்ஸ் சர்வதேச நாடுகளுக்கிடையேயான உறவில் நல்ல செல்வாக்கினை பெருக்கியுள்ளது. இவ்வாறு அவர் கூறினார். (ஸ்ரீ)



சுவிற்ஸர்லாந்து டாவோஸ்சில் நடைபெற்ற உலக பொருளாதார கருத்தரங்கில் கலந்துகொள்ள வந்த உக்ரைன் ஜனாதிபதி விக்டர் யானுகோவிச் (வலது) மற்றும் ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் ஆகியோர் சந்தித்து கலந்துரையாடினர்.




# இறுதி ஊர்வலத்தில் கார்க் குண்டுவெடிப்பு

## 40பேர் பலி ; 80பேர் காயம்

ஈராக் நாட்டின் தலைநகர் பக்தாத்தில் ஷியா பிரிவு முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் பகுதியில் நேற்றுமுன்தினம் ஒரு இறுதிச் சடங்கு நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது. அப் போது அங்கிருந்த ஒரு காரில் வைக்கப்பட்டிருந்த சக்திவாய்ந்த குண்டுவெடித்தது.

இதனால் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்கள் அலறியடித்து நாலா புறமும் சிதறி ஓடினார்கள்.

ஆனாலும், இந்தக் குண்டுவெடிப்பில் 40 பேர் அந்த இடத்திலேயே பலியானார்கள். படுகாயங்களுடன் 80க்கும் மேற்பட்டவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இதனால் பலியானோர் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

குண்டுவெடிப்பால் ஆத்திரமடைந்த பொதுமக்கள், பொலிஸார் சரியான பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூறி அவர்களுடன் மோதலில் ஈடுபட்டனர். பொதுமக்களில் சிலர் பொலிஸாரை நோக்கித் துப்பாக்கியால் சுட்டனர். இதனால் கலவரக்காரர்களை கலைக்க பொலிஸாரும் திருப்பிச் சுட்டனர். இந்தத் துப்பாக்கி சண்டையில் யாரும் பலியானார்களா? என்ற விபரம் தெரியவில்லை.

ஷியா பிரிவைச் சேர்ந்த பிரதமர் நூரி அல்-மாலிக் தலைமையில் மீண்டும் அமைந்த அரசுக்கு சவால் விடும் வகையில் இந்தக் குண்டுவெடிப்பை சதிகாரர்கள் நடத்தி இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

இந்தப் பெரிய குண்டுவெடிப்பு தவிர பக்தாத் நகரில் மேலும் 4 இடங்களில் குண்டுகள் வெடித்ததாகவும், இதில் பலர் பலியானதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ)

# அம்மையாரை அரியணையில் ஏற்றி நீங்கள் சாதிக்கப் போவதுதான் என்ன?

## சீமானுக்கு கவிஞர் தாமரை கடிதம்



நாம் தமிழர் கட்சித் தலைவரும் இயக்கு நருமான சீமானுக்கு கவிஞர் தாமரை கடிதம் ஒன்றையெழுதியுள்ளார்.

அக்கடிதத்தின் விபரம் வருமாறு,

திரைக்கலைஞர்களாக இருந்து கொண்டே தமிழீழ மக்களைக் காப்பதற்காக மற்றவர் களோடு சேர்ந்து நாம் போராடினோம்.

ஆவேசமான பேச்சு, கைது , சிறை என்று போன்ற நீங்கள் ஒரு கட்டத்தில் நேரடியாக அரசியலில் இறங்கி நாம் தமிழர் கட்சியை நிறுவினீர்கள். தெளிவான சில அரசியல் கொள்கைகளின் அடிப்படையில் இயங்கினாலும் நான் எந்தக் கட்சி அல்லது அமைப்பையும் சேர்ந்தவளில்லை. எப்போதும் இப்படி இருப்பதையே விரும்புகிறேன்.

ஆனால், உங்கள் நலம் விரும்பிகள் என்று சாதாரணமாகச் சொல்லமாட்டேன், உங்கள் உறவுகளை நான் உட்பட உரிமைச் சொந்தங்களை, அண்மையில் குழம்பித் திகைக்கச் செய்துள்ள ஒன்றை, உங்கள் முகத்திற்கு நேரே சொல்லப் பலரும் தயங்கிக் கொண்டிருக்கும் ஒரு செய்தியை இந்தத் திறந்த மடல் வழியாக உங்கள் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறேன்.எனக்கு அந்த உரிமை இருக்கிறது என்றே நம்புகிறேன்.

வரப்போகும் சட்டப் பேரவைத் தேர்தலில் ஜெயலலிதாவையும் அ.தி.மு.கவையும் ஆதரிக்கப் போவதாக நீங்கள் பேசியும் எழுதியும் வருவது எங்கள் நெஞ்சங்களில் ஆயிரம் இடிகளை ஒன்றாக இறக்கியுள்ளது.

நம் தமிழினத்தை அழித்து, மென்று , உமிழ்நீரால் ஊறவைத்த காங்கிரஸ் கட்சியை தமிழ்நாட்டிலிருந்து ஒழிக்க வேண்டுமென்று நீங்கள் சொல்வது நூற்றுக்கு நூறு சரி. ஆனால் அதற்காக அ.தி.மு.க.வை ஆதரிக்கவேண்டுமென்றால் எப்படி?

போர் என்றால் சாகத்தான் செய்வார்கள் என்ற காலத்தால் அழிக்கமுடியாத அரும் பெரும் பொன்மொழியை உதித்தவரல்லவா? அதுதான் அவருடைய உண்மையான உள்ள வெளிப்பாடு. கலைஞரின் இனத் துரோகத்தை தோலுரித்துக் காட்டும் நீங்கள் ஜெயலலிதாவின் இனத்துரோகத்தையும் உரிக்கவேண்டாமா? அதை மன்னிக்க முடியாதென்றால் இதையும் மன்னிக்க முடியாதல்லவா? ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தாலும் தமிழர் விரோதப் போக்கில் செயற்பட்டால் எதிர்த்து முழங்குவேன் என்று கூறியுள்ளீர்கள். அப்படியானால் அவர் இதுவரை தமிழர் விரோதப் போக்கில் செயற்படவில்லை என்கிறீர்களா? அல்லது இனி தமிழர் விரோதப் போக்கில் செயற்படமாட்டேன் என்று உங்களிடம் தனியாக ஏதும் உறுதியளித்திருக்கிறாரா?

கலைஞர் காங்கிரஸோடு அப்பிக்கொண்டிருப்பவர். ஜெயலலிதா அதை பிய்த்து எடுத்து தான் அப்பிக்கொள்ளத் துடிப்பவர். இவர்களுக்கு இடையில் எதில்தான் வேறுபாடு உள்ளது? ஒருவர் வேட்டி மற்றையர் சேலை அணிவது தவிர ? ஒருவேளை கூட்டணியில் திடீர் மாற்றம் ஏற்பட்டு காங்கிரஸுடன் அ.தி.மு.க.கூட்டணி சேர்ந்துவிட்டால் உங்கள் வியூகம் என்னாகும்? அப்போது காங்கிரஸை ஒழிப்பதற்காக கலைஞரை ஆதரிப்பீர்களா? ஐந்தாண்டு கழித்து அடுத்த தேர்தலில் கலைஞருக்கு ஆதரவு கேட்கமாட்டீர்கள் என்பது என்ன நிச்சயம்? அவரை எதிர்ப்பதற்காக இவரையும் இவரை எதிர்ப்பதற்காக அவரையும் ஆதரித்து தேர்தலுக்கு தேர்தல் கால்பந்தாக மாறி...ஐயகோ! அதைத்தானே இயக்குநரே, எங்கள் அன்பிற்கினிய வை. கோவும் தோழர் திருமாவளவனும் செய்து கொண்டிருக்கிறார்கள். காலம் காலமாக தமிழகம் இந்தக் கால்பந்து விளையாட்டைத் தானே பார்த்துக்கொண்டிருக்கிறது. தமிழக அரசியல் என்பது ஓடுகிற இராட்டினமாகி வெகுகாலமாகிவிட்டது. தி.மு.கவும் அ.தி.மு கவும் மேலும் கீழுமாய் போய் வந்து கொண்டிருக்கின்றன. இதில் ஏறினால் மேலும் கீழுமாக சுற்றிச் சுற்றி, தலைசுற்றிப் போகலாமே தவிர, வேறு ஊருக்கு பயணம் போக முடியாது. இதை மக்கள் தெரிந்துகொண்டார். அதனால் தான் மாற்று அரசியலை எதிர்பார்த்து தவம் கிடக்கிறார்கள்.

விஜயகாந்த் இட்டு நிரப்பமுயன்றது இந்த இடத்தைத்தான். இருகழகங்களுக்கும் மாற்றாக அவர் இருப்பார் என்று நம்பித்தான் மக்கள் இன்றைய இடத்தை அவருக்கு கொடுத்திருக்கிறார்கள்.

ஆனால் அவரும் மக்களை ஏமாற்றி விட்டார்.ஊழலற்ற நல்லாட்சி என்ற அடிப் படையில் தான் அவர் மக்களை அணுகி னார்.

தமிழினம், தமிழர் இறையாண்மை என்ற அடிப்படையில் அணுகவில்லை. எனவே தான் காங்கிரஸுக்கு கைகொடுக்கும் நிலைக்கு நெருங்கி வந்தார். காலாவதியாகிப் போன இந்திய இறையாண்மை என்ற இறகுத் தொப்பியை அணிந்துவந்தவர் அவர். தமிழக அரசியல் வெற்றிடத்தை அவரால் நிரப்பமுடியாதென்பது நிதர்சனம். காங்கிரஸ் கட்சியை தமிழகத்திலிருந்து ஒழிக்க வேண்டுமென்பது அவர்கள் தமிழீழத்தை சிதைத்தார்கள் என்பதற்காக மட்டும்தானா? இல்லவே இல்லை. இன்னும் விரிந்த நோக்கில், நம் தெள்ளிய, நேரிய நோக்கமான தேசிய இனங்களின் தன்னுரிமை, இறையாண்மை பெற்ற தமிழ்நாடு ஆகியவற்றின் முழுமுதல் எதிரியாகவும் இருப்பதால் தானே?

இரண்டகம் செய்யும் இரட்டையர்களான தி.மு.க.வையும் அ.தி.மு.வையும் ஒன்றாகக் கருதி ஒரு சேர தனிமைப்படுத்தவேண்டும். பதவி அரசியலை சந்தர்ப்பவாத கூட்டணி அரசியலை மறுதலிக்கவேண்டும்.

தேர்தல் வரட்டும்.போகட்டும். ஆனால் இந்தக்கொள்கை வழி தமிழ்த்தேசியப் போராட்டத்தை முன்னெடுப்பது உங்கள் பணியாக இருக்கவேண்டும். இதை நீங்கள் செய்தால் எம்மைப்போன்ற தமிழ் உணர்வாளர்களின் ஆதரவு கிட்டும். தமிழ்த்தேசிய இயக்கங்கள் வலுவாக உங்கள் பின்னால் அணிவகுப்பார்கள்.உலகத் தமிழர்கள் வலுக்கூட்டுவார்கள்.நாளைஅழிக்கமுடியாத பெரும் அரசியல் சக்தியாக உருவெடுக் கலாம்..

அதைவிடுத்து நீங்களும் அரசியல் சதுரங்கத்தில்பகடையாக மாறி உருண்டீர்களானால் நாங்கள் பதைபதைத்துப் பார்த்து பத்து அடி தள்ளி நிற்பதைத் தவிர வேறென்ன செய்வது? நான் என்ன செய்யட்டும், பகலவன் படப்பிடிப்பை இப்போதே நடத்தலாமா என்று நண்பர்களைக் கேட்கிறீர்கள். சரி. என்னுடைய யோசனையைச் சொல்கிறேன்.

ஐந்தாண்டுகளுக்கு தேர்தலில் நிற்க வேண்டாம். ஊர் ஊராகச் சென்று நாம் தமிழர் கட்சி அமைப்பை வலுப்படுத்துங்கள். தமிழ்த்தேசிய சிந்தனையை மக்களிடம் வலுவாக வளர்த்தெடுங்கள்.


காங்கிரஸ் நிற்கும் தொகுதிகளில் மட்டும் எதிர்த்து பரப்புரை செய்யலாம். இல்லை, இந்தத் தேர்தலிலேயே நின்றாக வேண்டுமென்றால் நல்லது. காங்கிரஸ் நிற்கும் தொகுதிகளில் மட்டும் போட்டியிடுங்கள். காங்கிரஸை எதிர்த்து தோற்கடிப்போம்.

இதையெல்லாம் செய்தபின் பகலவனுக்காகவும் நேரம் ஒதுக்கினால், நல்லது... சொல்லியனுப்புங்கள், நானும் வந்து பாடல் எழுதுகிறேன். (ஸ்ரீ-2)




# தேர்தலை முன்னிட்டே மீனவர் குடும்பத்துக்கு ஜெயலலிதா ஆறுதல் தெரிவித்தார்

## கருணாநிதி புகார்



(சென்னை)

விரைவில் தேர்தல் நடைபெற உள்ள தாலேயே, கொல்லப்பட்ட மீனவரின் குடும்பத்துக்கு அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா நேரில் சென்று ஆறுதல் தெரிவித்துள்ளார் என முதல்வர் கருணாநிதி புகார் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து நேற்று முன்தினம் அவர் வெளியிட்ட அறிக்கையில், நாகப்பட்டினம் மாவட்டத்தில் கொல்லப்பட்ட மீனவர் ஜெயக்குமாரின் குடும்பத்துக்கு ஆறுதல் கூறுவதற்காக ஜெயலலிதா ஹெலிகொப்டரில் சென்று ஹெலிகொப்பரிலேயே திரும்பியிருக்கிறார்.

தமிழகத்தில் இதுவரை பல மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் அ.தி.மு.க ஆட்சி நடைபெற்ற காலத்திலும் கூட கொல்லப்பட்டு பரிதாபகரமாக இறந்திருக்கிறார்கள்.

உதாரணமாக கடந்த 1991 தொடக்கம் 1996 ஆம் ஆண்டுகளில் ஜெயலலிதா ஆட்சி நடைபெற்ற போது 38 மீனவர்கள் கொல்லப்பட்டார்கள். கடந்த 2001- தொடக்கம் 2011 வரை 17 மீனவர்கள் கொல்லப்பட்டார்கள். இதில் எந்த ஒரு மீனவர் கொல்லப்பட்டு இறந்ததற்காகவாவது ஜெயலலிதா, ஹெலிகொப்டரில் வேண்டாம் ; புகைவண்டியிலோ, காரிலோ சென்று இறந்தவர்களின் குடும்பத்துக்கு ஆறுதல் கூறியதுண்டா?

அப்போதெல்லாம் போகாமல், இன்னும் மூன்று மாதத்தில் தேர்தல் வருகிறது என்றதும், நாகப்பட்டினத்துக்குச் சென்று ஆறுதல் கூறுகிறார் என்றால் அது உண்மையிலே பாசமா, வேஷமா? ஆறுதல் கூறப் போன இடத்தில் கூட, தான் ஆட்சிக்கு வர மீனவர்கள் வாக்களிக்க வேண்டுமென்று ஜெயலலிதா கோரிக்கை வைத்திருக்கிறார்.

நாகை மீனவர் ஜெயக்குமார் மறைந்த செய்தி கேள்வியுற்றதும் அவரது உடல் அடக்கம் செய்வதற்கு முன்பாகவே தமிழக அரசின் சார்பில் ரூ. 5 இலட்சம் தரப்பட்டது மட்டுமல்லாது, அவரது மனைவி முருகேஸ்வரிக்கு சத்துணவு உதவி அமைப்பாளர் பதவிக்கான பணி நியமன உத்தரவும் தரப்பட்டது.

ஆனால், அவரது உடல் அடக்கம் எல்லாம் முடிவுற்ற பின்னர் தேர்தலை முன்னிட்டு மீனவர்களை ஏமாற்றுவதற்காக ஜெயலலிதா இந்தப் பயணம் மேற்கொண்டு இருக் கிறார் என்பதுதான் உண்மை. (ஸ்ரீ-2)




ஏ.ஆர்.ரகுமானுக்கு கிரிஸ்டல் விருதை உலக பொருளாதார அமைப்பு வழங்கியது.....

கெட்ட நடவடிக்கைகள் ஆரம்பத்தில் இன்பமாக இருந்தாலும் கடைசியில் கொடுந் துன்பக் காட்டுக்குத் தான் அழைத்துச் செல்லும். – கவி தாம்சன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## வன் செயலைத் தடுக்கலாம் அவன் செயலை என்ன செய்யலாம்?

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா சிறைத்தண்டனையை அனுபவித்து வருகிறார்.

வன்னி யுத்தத்தின்போது, இராணுவத் தளபதியாக விருந்து விடுதலைப் புலிகளை ஒழித்துக் கட்டிவிட்ட தான செய்தியை சலூட் அடித்து ஜனாதிபதிக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்தவர் அவர்.

ஆனால் இராணுவ நீதிமன்றம் அவருக்கு வழங்கிய தீர்ப்பின் பிரகாரம் அவர் இப்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இராணுவ நீதிமன்றம் சட்டப்படியானதல்ல; அதன் தீர்ப்பு ஏற்புடையதும் அல்ல எனக் கூறி சரத் பொன்சேகா தாக்கல் செய்த மனுவுக்கு 'இராணுவ நீதிமன்றம் அரசியல் அமைப்பிற்கு உட்பட்டது' என்ற தீர்ப்பை மேல் நீதிமன்றம் வழங்கியுள்ளது.

இதன் மூலம் சரத் பொன்சேகாவின் எதிர்காலம் மிக மோசமானதாக இருக்கும் என ஆருடம் கூறுவதற்குத் தயங்க வேண்டிய தேவையில்லை. அதேநேரம் சரத் பொன்சேகாவின் உடல்நிலை பாதிக்கப்பட்டு வருகின்றது என அவர் தரப்பு கூறிவருகிறது. அதில் உண்மை இருக்கவும் செய்கிறது.

சரத் பொன்சேகாவுக்கு எதிர்ப்பு சக்தி குறைந்து வருகிறது என மருத்துவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனராம்.

கடவுளே! வன்னி யுத்தத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போர் நடத்தி அதில் வெற்றி கண்ட இராணுவத் தளபதிக்கு எதிர்ப்புச் சக்தி குறைகிறது என்ன செய்ய முடியும்! படைத்தரப்பின் எதிர்ப்புச் சக்தி குறைந்தால் சீனாவிடம் ஆயுதம் வேண்டலாம். பாகிஸ்தானில் பயிற்சி கொடுக்கலாம். படைத்தரப்பின் வலிமை குறைவிற்கான காரணம் என்னவென்று ஆராய்ச்சி நடத்த ஆணைக்குழு நியமித்து அதற்கு ஏற்ற பரிகாரம் தேடலாம்.

ஆனால், இதுவோ முன்னாள் இராணுவத் தளபதியின் உடல் எதிர்ப்புச் சக்தி குறைகிறது. என்ன செய்ய முடியும். எல்லாம் அவன் செயல் என்று நினைப்பதைத் தவிர வேறு வழியேதும் தெரியவில்லை.

வன்செயலைத் தடுக்கலாம். ஆனால் அவன் செயலை தடுப்பது முடியாத காரியம் என்பதையே சரத் பொன்சேகாவின் உடல் எதிர்ப்புச் சக்திக் குறைவு நிரூபிக்கிறது.

பார்த்தீர்களா? மிகப் பெரும் யுத்தம். ஐயா... அம்மா... காப்பாற்றுங்கள் என்ற அவலக் குரல். இவை ஒலித்து ஒருவருடம் நிறைவதற்குள் யாரோ ஒருவர் சரத் பொன்சேகாவின் வெண்குருதிச் சிறு துணிக்கைகளுடன் போரில் ஈடுபட்டுள்ளார். அவர் யார்? அவர் சரத் பொன்சேகாவுடன் மட்டும்தான் போர் நடத்துவாரா? இப்படியான கேள்விகளை எங்களுக்குள் கேட்பது எம் ஆன்மிக வாழ்வுக்கும் பிறருக்குத் தீங்கெண்ணா பெரு வாழ்வுக்கும் உதவியாக அமையும்.

# சட்டம் ஒழுங்கை யாழில் நிலைநாட்ட நீதியரசர் தீவிரமாக செயற்படுகிறார்

## சாவகச்சேரி நீதிபதி உரை

(யாழ்ப்பாணம்)

யுத்தம் முடிபடைந்த பின்பு யாழ். மாவட்டத்தில் முதல் தடவையாக நீதிமன்றக் கட்டிடம் ஒன்றும் நீதிபதியின் வாசஸ்தலத்திற்குமான அடிக்கல் நாட்டப்பட்டு உடனடியாக வேலைகள் தொடங்கப்படுவதையிட்டு நான் மகிழ்ச்சி அடைகின்றேன் என சாவகச்சேரி நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா தெரிவித்தார். நீதிமன்றக் கட்டிடத்திற்கான அடிக்கல்லை நாட்டிவைத்து உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது,

திருகோணமலை, மூதூர், வாழைச்சேனை, மட்டக்களப்பு, கல்முனை, வவுனியா ஆகிய நீதிமன்றங்களில் கட்டிடங்கள் அடிக்கல் நாட்டப்பட்டு திறந்துவைக்கப்பட்ட போது அந்தந்த நீதிமன்றங்களில் கடமையாற்றும் வாய்ப்பு எனக்குக் கிட்டியிருந்தது. இந்த வாய்ப்பு எல்லா நீதிபதிகளுக்கும் கிடைக்காத ஒன்று. வாழைச்சேனையைப் பொறுத்த மட்டில் சுற்றுலா நீதிமன்றம் கண்காணிப்பு உத்தியோகத்தர்களுடன் இருந்த பழைய கட்டிடம் ஒன்றில் நீதவானாகக் கடமையாற்றவேண்டிய நிர்ப்பந்தம் ஒன்று எனக்கு ஏற்பட்டிருந்தது.

அந்த நீதிமன்றத்தை இரண்டு வருடத்திற்குள் மாவட்ட நீதிமன்றமாக்கி பதிவாளரிலிருந்து கீழ்நிலை உத்தியோகத்தர் வரை நியமித்து புதிய கட்டிடம் ஒன்றையும் தனித்துநின்று ஸ்தாபித்தமை வடக்குக் கிழக்கில் வேறு எந்த ஒரு நீதிபதியாலும் செய்யப்படாத ஒன்றா கும்.

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரையில் முதன்முதலாக மேல் நீதிமன்றம் ஆரம்பிக்கப்பட்டபோது முதல் அரச சட்டத்தரணியாக சட்மா அதிபரால் பிரதிநிதித்துவப்படுத்தியதை யாவரும் அறிவார்கள்.

பிரதம நீதியரசர் அசோக டி சில்வா அவர்களால் நீதிமன்றக் கட்டிடப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு விரைவாக முடிக்கப்படல் வேண்டும் என்பதிலும் குடா நாட்டில் சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்பட வேண்டும் என்பதிலும் மிகுந்த அக்கறையுடன் செயற்படுகின்றார்.

இந் நீதிமன்றம் இங்கு பணிபுரியும் சட்டத்தரணிகளுக்கும், நீதிமன்ற உத்தியோகத்தர்களுக்கும், பொதுமக்களுக்கும் புதிய நீதிமன்ற கட்டிடம் உருவாகுவது பல்வேறு வகையிலும் உதவும்என்பது திண்ணம்.

மேலும் எனது பணிக்கு நீதிமன்ற உத்தியோகத்தர்களும், சட்டத்தரணிகளும் இங்கு வருகை தந்திருக்கும் திணைக்களத் தலைவர்களும், பொலிஸ் உத்தியோகத்தர்களும், இராணுவ உத்தியோகத்தர்களும் சிறந்த ஒத்துழைப்பு வழங்குவதாகக் கூறியிருக்கிறார்கள்.

பிரதம நீதியரசர், நீதிச்சேவை ஆணைக்குழு மற்றும் நீதியமைச்சும் எனது பணிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகிறார்கள். நான் இங்கு வந்த போது மேல்நீதிமன்ற நீதிபதி பரமராஜா அவர்கள் இப் பணிகளை விரைவாகத் தொடங்குமாறு பணிப்புரை விடுத்திருந்தார். எனது தலைமையின் கீழ் இக் கட்டிடப் பணிகள் சிறப்பாகவும், விரைவாகவும் நிறைவுபெற வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றேன் என்றார். (ச-5)

# பொலிஸ்மா அதிபருக்கு உயர் நீதிமன்றம் அழைப்பாணை

(கொழும்பு)

பொலிஸ் மா அதிபரை நீதிமன்றத்தில் சமுகமளிக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தை அவமதித்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள நிலையிலேயே இவரை நீதிமன்றத்தில் சமுகமளித்து விளக்கம் அளிக்கமாறு உயர் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

வேலையிலிருந்து நிறுத்தப்பட்டுள்ள அம்பாறையில் முன்னாள் பொலிஸ் அதிகாரி ஜே.ஆர். ஜயவர்த்தன தாக்கல் செய்த மனுவை பரிசீலனை செய்த பிரதம நீதியரசர் அசோக டீ சில்வா உள்ளிட்ட மூன்று நீதியரசர்கள் கொண்ட குழுவே இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இதன் பிரகாரம் எதிர்வரும் 11ஆம் திகதி நீதிமன்றத்தில் சமுகமளிக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு முன்னறிவித்தல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# தமிழக மீனவர்கள் கொல்லப்படுவதை கண்டித்து ஆர்ப்பாட்டம்

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கொல்லப்படுவதை கண்டித்து கடலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மீனவர் பேரவை சார்பில் நேற்று முன்தினம் வேலை நிறுத்தம் மற்றும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றன.

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து கொல்லப்படுவதைக் கண்டித்தும் மீனவர்களைக் காப்பாற்றத் தவறியதாக இந்திய மத்திய மாநில அரசுகளுக்குக் கண்டனம் தெரிவித்தும் கச்சதீவை மீட்க வலியுறுத்தியும் கடலூர் மாவட்டத்தில் வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு தமிழ்நாடு மீனவர் பேரவை அழைப்பு விடுத்து இருந்தது.

அதன்படி மீனவர்கள் நேற்று முன்தினம் மீன்பிடிக்கச் செல்லாமல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட் டனர்.

25 ஆயிரம் குடும்பங்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபடவில்லை என மீனவர் பேரவை நிர்வாகிகள் தெரிவித்தனர்.

மீன்வரத்து இல்லாததால் மீன் பிடி இறங்கு தளங்கள், மீன் விற்பனை அங்காடிகள் வெறிச்சோடிக் கிடந்தன. மேலும் மீனவர்கள் பங் கேற்ற ஆர்ப்பாட்டம் கடலூர் திருப் பாப் புலியூர் உழவர் சந்தை எதிரில் நடைபெற்றது. (ஸ்ரீ-2)

## இராணுவ முகாம் மூடப்பட்டது

(அல்வாய்)

வடமராட்சியில் யாழ்.பருத்தித்துறை வீதியில் கடந்த 15 ஆண்டுகாலமாக விருந்த இராணுவ முகாம் நேற்று முன்தினம் மூடப்பட்டுள்ளது.

இங்கு போடப்பட்டிருந்த காவலரண்கள் யாவும் கழற்றப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதோடு அவர்கள் தங்கியிருந்த மாடி வீட்டினை உரிமையாளரிடம் கையளித்துள்ளனர்.

மேற்படி முகாமிலிருந்த இராணுவத்தினர் 2 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள புறாப்பொறுக்கி முகாமிற்கு மாற்றப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-3-19)

# பொருளாதார அபிவிருத்திக்கு படையினர் உதவ வேண்டும்

## விமானப் படைத்தளபதி தெரிவிப்பு

விமானப் படையினருக்கு புதிய தொழில் நுட்பங்களைக் கையாள்வது தொடர்பில் பயிற்சிகள் வழங்கியுள்ளோம்.

அவற்றைக் கொண்டு பொருளா தார அபிவிருத்திக்கு படையினர் உதவ வேண்டும் என கூட்டுப்படை பிரதானியும் விமானப் படைத்தளபதியுமான எயார் மார்ஷல் றொஷான் குணதிலக தெரிவித்தார்.

திருகோணமலை சீனக்குடா விமானப்படைப் பயிற்சித் தளத்தில் நேற்று நடைபெற்ற விசேட நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# சுவாமி விவேகானந்தரின் சிகாகோ சொற்பொழிவுகள்



பிரிவினைவாதம், அளவுக்கு மீறிய மதப்பற்று, இவற்றால் உண்டான மதநெறி, இவை இந்த அழகிய உலகை நெடுநாளாக இறுகப் பற்றியுள்ளன. அவை இந்த பூமியை நிரப்பியுள்ளன. உலகை இரத்த வெள்ளத்தில் மீண்டும் மீண்டும் மூழ்கடித்து, நாகரிகத்தை அழித்து, எத்தனையோ நாடுகளை நிலைகுலையச் செய்துவிட்டன. அந்தக் கொடிய அரக்கத்தனமான செயல்கள் இல்லாதிருந் தால் மனித சமுதாயம் இன்றிருப்பதை விடப் பலமடங்கு உயர்நிலை எய்தியிருக்கும்!

அவற்றிற்கு அழிவு காலம் வந்து விட்டது. இன்று காலையில் இந்தப் பேரவையின் ஆரம்பத்தைக் குறிப்பிட முழங்கிய மணி, மத வெறிகளுக்கும், வாளாலும் பேனாவாலும் நடைபெறுகின்ற கொடுமைகளுக்கும், ஒரே குறிக்கோளை அடைய பல்வேறு வழிகளில் சென்று கொண்டிருக்கும் மக்களிடையே நிலவும் இரக்கமற்ற உணர்ச்சிக்கும் சாவு மணியாகும் என்று நான் திடமாக நம்புகிறேன்.

# நோய்த்தடுப்பு மருந்துகள் குறித்த தேசிய விழிப்புணர்வு திட்டம்

இலங்கை அரசாங்கம் யுனிசெவ் மற்றும் உலக சுகாதார அமைப்புடன் இணைந்து பொதுமக்களுக்கு நோய்த்தடுப்பு மருந்துகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் தேசிய விழிப்புணர்வு திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.

உறங்கிக் கொண்டிருக்கும் பேய்களை எழுப்பாதீர்கள் எனும் தொனிப்பொருளில் தேசிய நோய்த்தடுப்புத் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளதுடன் இந்த திட்டத்தின் மூலம் சலரோகம், தொண்டைக்கரப்பன், குக்கல் , ஏற்புவலி, ஹெபடைடிஸ் பீ, ஹீமோபிலஸ் இன்புளுவென்ஸா பீ நோய்கள் , போலியோ, சின்னம்மை, மூளைக் காய்ச்சல் ,ருபெல்லா மற்றும் கூவைக் கட்டு போன்ற நோய்களை கட்டுப்படுத்தவது குறி த்த விழிப்புணர்வை பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

நோய்த்தடுப்பு மருந்துகளை வழங்குவதன் மூலம் தவிர்க்கப்படக்கூடிய நோய்கள் அபாயகரமானதாயும் சிறுவர்களையும் இளம் வயதினரையும் தொடர்ந்து பாதிக்கக் கூடியதாயும் உள்ளது. உரிய காலப் பகுதியில் உரிய நோய்த்தடுப்புகளை வழங்குவதன் மூலம் இக்கொடிய நோய்களி னால் ஏற் படக்கூடிய நிரந்தர உடல் ஊனங்கள், சுகாதார நலக்கேடுகள் மற்றும் மரணத்திலிருந்து கூட பிள்ளைகளை பாதுகாத்துக் கொள்ள முடியும் என சுகாதார அமைச்சர் மைத்திரி பால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இந்த நோய்த்தடுப்புத் திட்டம் குறித்து கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன கருத்து தெரிவிக்கையில், சிறுவர்களின் பாதுகாப்புக்கான ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் சிறுவர்களுக்கு குறித்த காலத்தில் வழங்க வேண்டிய நோய்த்தடுப்புகளை வழங்குவதன் முக்கியத்துவம் குறித்து கட்டாயம் அறிந்திருக்க வேண்டும் என்றார்.

நோய்த்தடுப்புகளை வழங்குவதில் இலங்கை முன்னணியில் திகழ்ந்திருக்கின்றது. அத்துடன் பாரிய நோய்த்தடுப்பு திட்டத்தின் மூலம் போலியோவை கட்டுப்படுத்துவதில் பிராந்தியத்தின் முதன்மை நாடாக திகழ்கிறது.

இதேபோன்ற அக்கறையுடன் அனைத்து தரப்பினரும் தொடர்ந்தும் செயற்படுவதன் மூலமே இன்றைய மற்றும் நாளைய தலைமுறைக் குழந்தைகளையும் இத்திட்டத்தின் பயனாளிகளாக பேண முடியும் என யுனிசெவ் அமைப்பின் பிரதிநிதி ரீசா ஹொசைனி தெரிவித்துள்ளார்.

நோய்த்தடுப்பு மருந்துகள் மூலம் வருடமொன்றுக்கு அண்ணளவாக 2 மில்லியனுக்கும் அதிகமான உயிரிழப்புகள் தவிர்க்கப்படுகிறது. சுகாதார அமைச்சின் தொற்றுநோய்த்தடுப்பு வைத்திய நிபுணரான வைத்திய கலாநிதி திருமதி. பபா பலிஹவதன கருத்து வெளியிடுகையில், இந்த தேசிய நோய்த்தடுப்பு திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஒவ்வொரு நோய்த்தடுப்பு மருந்துகளினதும் தரம் மற்றும் பாதுகாப்பு, உலக சுகாதார அமைப்பின் அங்கீகாரத்தை பெற்றுள்ளது. அத்துடன் சர்வதேச தரங்களுக்கு அமைவாகவே இந்த தடுப்பு மருந்துகள் இலங்கையில் உபயோகிக்கப்படுகின்றன என்றார்.

1978 ஆம் ஆண்டு முதல் இலங்கை அரசாங்கத்துடன் யுனிசெவ் மற்றும் உலக சுகாதார அமைப்பு போன்றன இணைந்து முன்னெடுத்திருந்த நோய்த்தடுப்புத் திட்டங்களின் மூலம் போலியோ தொண்டைக்கரப்பன், ஏற்புவலி மற்றும் மேலும் நோய்த்தடுப்பு மருந்துகள் மூலம் கட்டுப்படுத்தக்கூடிய நோய்கள் ஏற்படுவது பெரிதளவில் குறைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் உலகிலேயே சிறந்த நோய்த்தடுப்புகளை மேற்கொள்ளும் நாடுகளுள் ஒன்றாக இலங்கை திகழ்கிறது.

### நோய்த்தடுப்பு மருந்துகள் பற்றிய தகவல்கள்.

✦ நோய்த்தடுப்பு மருந்துகளை வழங்குவதன் மூலம் ஏறத்தாழ 99 வீதம் வரை நோய்த்தடுப்பு மருந்துகளால் தவிர்க்கக் கூடிய நோய்கள் ஏற்படுவது தவிர்க்கப்படுகிறது.

✦ நோய்த்தடுப்புகளை வழங்காமையால் உலகளாவிய ரீதியில் ஏறத்தாழ 3 மில்லியன் சிறுவர்கள் உயிரிழக்கின்றனர். 2 இலட்சம் பேர் வரை பக்கவாதத்துக்கு உள்ளாகின்றனர். ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பேர் பார்வையை இழக்கின்றனர்.

✦ வருடாந்தம் சின்னம்மை நோயினால் 1.6 மில்லியன் குழந்தைகள் வரை உயிரிழக்கின்றனர். இதற்கான நோய்த்தடுப்பை வழங்குவதன் மூலம் குழந்தைகளின் இறப்பு வீதம் 30 வீதத்தினால் குறைவடைந்துள்ளது.

✦ நோய்த்தடுப்புகளை வழங்குவது அதிகரித்துள்ளமை, தூய்மையான நீர் மற்றும் மலசலகூட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டமை மற்றும் சுகாதார சேவைகளில் ஏற்பட்ட முன்னேற்றம் போன்ற காரணிகளால் வருடாந்தம் குழந்தைகளின் மரண எண்ணிக்கை 10 மில்லியனை விடக் குறைந்துள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. பின்வரும் இணையத்தளங்கள் மூலம் மேலதிக விபரங்களைப் பெறலாம்.

http://www.unicef.org
www.epid.gov.lk/
www.who.int/topics/immunization/en

(ஸ்ரீ-2)

# நீதியான, சுதந்திரமான தேர்தலை நடத்த சகல கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும்

## பிரதமர் தெரிவிப்பு



உள்ளூராட்சி மன்ற தேர்தலை நீதியானதும் சுதந்திரமானதுமான முறையில் நடத்துவதற்கு சகல கட்சிகளும் அர்ப்பணிக்க வேண்டும் என பிரதமர் தி.மு.ஜயரட்ன தெரிவித்தார்.

கண்டி மாவட்டத்திற்கான வேட்பு மனுக்களை தாக்கல் செய்ததன் பின்னர் அங்கு குழுமியிருந்த ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலை நடத்துவதற்கு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தேர்தல்கள் ஆணையாளருக்கு முழுமையான ஒத்துழைப்பை நல்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படும் தேர்தலில் போட்டியிடும் இதர கட்சிகளும் அவ்வாறே செயற்பட வேண்டும்.

மக்கள் ஜனநாயக ரீதியில் வாக்குகளை அளிப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி கொடுப்பது சகல அரசியல் கட்சிகளின் பொறுப்பாகும். அதனடிப்படையில் எவ்வித மான வன்மு றைகளும் இன்றி தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுத்து செல்வதற்கான சகல கட்சிகள், வேட்பாளர்கள் மற்றும் வாக்காளர்கள் செய ற்பட வேண்டும். தேர்தலில் விசேட வெற்றியை பெற்றுக் கொள்வது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்ளு சவாலில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி மக்கள் விடுதலை முன்னணி இரண்டாக பிளவுபட்டுள்ளன. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்கள் பிரிந்திருக்கின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர்கள் சிலர் தங்களுடைய சுவரொட்டியில் எங்களுடைய தலைவர் சஜித் என்றும் இன்னும் சிலர் எங்கள் தலைவர் ரணில் என்றும் பொறித்துள்ளனர். இவ்வாறான நிலையிலேயே கிராமங்களுக்கு சேவையாற்ற வேண்டியவர்களை நாம் தெரிவு செய்துள்ளோம்.

மஹிந்த சிந்தனையில் எதிர்கால நோக்கை முன்னெடுத்து செல்வதற்கான வேலைத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு எதிர்கால உள்ளூராட்சி மன்ற தேர்தல் பிரபலமான முச்சந்தியாகும். அந்த வகையில் நாட்டை கட்டியெழுப்புவதற்கு பலமான குழுவை நாட்டிற்கு இனங்கண்டு கொடுக்க வேண்டும் என்றார். (ஸ்ரீ-2)

# தென்கடற்பரப்பில் திமிங்கிலங்களை பார்வையிடுவதற்கு வாய்ப்பு

தென்கடற்பரப்பில் திமிங்கிலங்களை பார்வையிடுவதற்கான போக்குவரத்து சேவையை கடற்படை ஆரம்பித்துள்ளது.

350 பேர் பயணிக்க கூடிய சொகுசுக் கப்பல் இதற்காக ஈடுபடுத்தப்படும் என்று கடற்படை பேச்சாளர் கப்டன் அதுலசேனக தெரிவித்துள்ளார்.

காலி கடற்படை முகாமில் இந்த நடவடிக்கை நாளை ஆரம்பமாகும். இந்த நிகழ்வில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார்.

இதன் மூலம் சலுகை விலையில் தென் கடற்பரப்பிலுள்ள திமிங்கிலங்களை பார்வையிடுவதற்கான சந்தர்ப்பம் மக்களுக்கு கிடைக்கும் என்று அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-9)

# பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கு கடனுதவி

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக்கமைய வெள்ளம் மற்றும் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு மூன்று மாத சம்பளத்தை வட்டியில்லாக் கடனாக வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இக்கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்த பொது நிர்வாக அமைச்சு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் பீ.பி. அபயகோன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் விசேட சுற்றறிக்கையொன்றை அமைச்சு வெளியிட்டுள்ளதுடன் சகல அமைச்சுக்கள் திணைக்களங்களினதும் செயலாளர்கள், மாகாண சபைகளின் செயலாளர்கள் மற்றும் அரச நிறுவனங்களின்முக்கியஸ்தர்களுக்கும் இச் சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வட்டியில்லாக் கடனாக வழங்கப்படும் மூன்று மாத கால சம்பளப் பணத்தை பத்து மாத காலத்துக்குள் மீள அறவிடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலாளர்களுக்கூடாக பாதிக்கப்பட்ட அரச ஊழியர்கள் இக்கடனைப் பெற்றுக் கொள்ள முடியும். பிரதேச செயலாளர்களின் சிபாரிசுக்கமைய கடன் பெற தகுதியானோர் தெரிவு செய்யப்படுவர். (ஸ்ரீ-2)

# ஆனையிறவு உப்பளத்தை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை

(கொழும்பு)

ஆனையிறவு உப்பளத்தை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவி ருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.


வடக்கில் ஏற்பட்ட யுத்தத்தினால் உப்பள நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந்தன. ஆனையிறவு உப்பளத்திலிருந்து வருடாந்தம் 70 ஆயிரம் தொன்னுக்கும் 80 ஆயிரம் தொன்னுக்குமிடையிலான உப்பு உற்பத்தி செய்யப்பட்டது.

ஆனையிறவு உப்பளத்தின் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதன் மூலம் தேசிய உப்பு உற்பத்தியை அதிகரிக்க முடியும் என்றும் உப்பு இறக்குமதிக்கான செலவை சேமிக்க முடியும் என்றும் அமைச்சு நம்பிக்கை வெளியிட்டுள்ளது. (ஸ்ரீ-9)



உலக அமைதிக்கான சிறப்பு யாகம் நேற்று மாலை பலாலி வீதி, கந்தர்மடத்தில் அமைந்துள்ள இந்துசமயப் பேரவையில் இடம் பெற்றது. ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜியின் நல்லாசியுடன் நடந்த இந்த யாகத்தை இந்தியாவில் உள்ள வாழும்கலை அமைப்பிலிருந்து வருகைதந்த அந்தணச் சிவாச்சாரியர்கள் நடத்தி வைத்தனர். இதனைப் படங்களில் காணலாம். படங்கள்:- எஸ்.கரன்

# இந்தியாவுக்கு உலகக்கிண்ணம்; டெண்டுல்கர் கனவு நனவாகுமா?



(மும்பை)

உலகக் கிண்ணத்தை கைப்பற்ற எதிர் பார்த்து ஆறாவது முறையாக படையெடுக் கிறார் சச்சின் டெண்டுல்கர். இம்முறை கடைசி வாய்ப்பு என்பதால் கூடுதல் ஆக்ரோசத்து டன் செயற்படக் காத்திருக்கிறார். உடல் காயத் தைப் பொருட்படுத்தாது மன வலிமையுடன் போராடி இந்திய அணிக்கு 28 ஆண்டுக ளுக்குப் பின் உலகக்கிண்ணத்தை வென்று தருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

கிரிக்கெட் சாதனைப் புத்தகத்தைப் புரட்டி னால் இந்திய அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கரின் பெயர்தான் அதி கம் இடம்பெற்றிருக்கும். அந்தளவிற்கு சாத னைமேல் சாதனை படைத்துள்ளார்.

டெஸ்ட் (177 போட்டி, 14ஆயிரத்து 692 ஓட்டங்கள், 51 சதம்) மற்றும் ஒருநாள் போட் டிகளில் (444 போட்டி, 17ஆயிரத்து 629 ஓட் டங்கள், 46 சதம்) அதிக ஓட்டங்கள், அதிக சதம் அடித்து முதலிடத்தில் இருக்கிறார்.

கடந்த 21 ஆண்டுகளாக விளையாடி வரும் இவருக்கு உலகக்கிண்ணம் மட்டுமே எட்டாக்கனியாகவுள்ளது.

தனது 16வது வயதில் 1989இல் இந்திய அணியில் அறிமுகமானார் சச்சின் டெண்டு ல்கர். 1992-ல் முதன் முறையாக உலகக் கிண்ணத் தொடரில் ஓட்டங்கள் குவித்த இவர் மொத்தம் 531 ஓட்டங்கள் எடுத்தார்.

பின் 1996-ல் நடந்த தொடரின் போது இவரது தந்தை மறைந்துவிட லண்டனிலி ருந்து மும்பை திரும்பினார். இறுதிச் சடங்கில் கலந்துகொண்டபின் மீண்டும் இங்கிலாந்து சென்றார். கென்யாவுக்கு எதிரான போட்டி யில் சதம் (101 பந்துகளில் 140 ஓட்டங்கள்) விளாசி தனது தந்தைக்கு அர்ப்பணித்தார்.

## தொடர் நாயகன்

கடந்த 2003-ல் நடந்த உலகக்கிண்ணத் தொடர் சச்சினுக்கு மிகச் சிறப்பாக அமைந் தது. இத் தொடரின் போது இவரது இடதுகை நடுவிரலில் காயம் ஏற்பட்டது. வலியைத் தாங்கிக் கொண்ட இவர் நாட்டுக்காகத் தொடர்ந்து விளையாடினார். நமீபியாவுக்கு எதிராக 152 ஓட்டங்கள் எடுத்த இவர் உலகக்கிண்ண அரங் கில் அதனது அதிகபட்ச ஓட்டங்களைப் பதிவு செய்தார்.

இறுதிப் போட்டியில் இவர் 04 ஓட்டங்களு டன் ஆட்டமிழக்க இந்தியாவின் உலகக்கிண் ணக் கனவு தகர்ந்தது.

ஆனாலும் ஒட்டுமொத்தமாக 673 ஓட் டங்களை எடுத்த இவர் தொடர் நாயகன் விரு தை தட்டிச்சென்றார்.

## எதிர்பார்ப்பு அதிகம்

இம்முறை உலகக்கிண்ணத் தொடரின் (பெப்ரவரி 19 தொடக்கம் ஏப்பிரல் 02ஆம் திகதிவரை நடைபெறும்) பெரும்பாலான போட்டிகள் இந்தியாவில் நடக்கவிருப்பதால் சச்சின் மீதான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

இவரது சாதனைகளை விரட்டிக்கொண் டிருக்கும் அவுஸ்திரேலிய அணித்தலைவர் பொன்டிங் அவுஸ்திரேலிய அணிக்கு 03 உலகக்கிண்ணங்களைப் பெற்றுத் தந்துள் ளார். அதிரடித் துடுப்பாட்டத்திற்குப் புகழ்ண பெற்ற மேற்கிந்தியத் தீவுகளின் விவியன் ரிச்சர்ட்ஸ் இரண்டுமுறை உலகக்கிண்ணம் வென்ற அணியில் இடம்பெற்றுள்ளார். இவர் வரிசையில் சச்சினும் இடம்பெறவேண்டும்.

## கடைசி வாய்ப்பு

தற்போது 37 வயதான சச்சினுக்கு உல கக்கிண்ணத்தைக் கைப்பற்ற இதுதான் கடைசி வாய்ப்பு. ஏனென்றால் அடுத்தமுறை 41 வயதை எட்டிவிடுவார் என்பதால் பங்கேற்பது கடினம். தவிர இருபது-20 போட்டிகளின் அசுர வளர்ச்சியால் எதிர்காலத்தில் 50 ஓவர் போட்டிகள் நடக்குமா என்ற அச்சம்வேறு நில வுகிறது.

இம்முறை சச்சினுக்கு ஏற்பட்டுள்ள காயம் (தொடைப்பகுதியில் பிடிப்பு) சற்றுக் கவலை அளிக்கிறது. ஆனாலும் உலகக்கிண்ணத் தொடருக்கு முன் மீண்டு விடுவார் என எதிர் பார்க்கப்படுகிறது.

## உள்ளூர் நெருக்கடி

கடந்த ஆண்டு தென்னாபிரிக்காவுக்கு எதிராக 200 ஓட்டங்களை எடுத்து மகத்தான சாதனை படைத்த சச்சினுக்கு இம்முறை உலகக்கிண்ணப் போட்டிகள் சொந்த மண் ணில் நடப்பது கூடுதல் நெருக்கடியைத் தர லாம். ஒவ்வொரு போட்டியிலும் இவர் ரண்மழை பொழியவேண்டும் என உள்ளூர் ரசிகர்கள் எதிர்பார்ப்பர். இந்திய அணி சிறப்பாகச் செயல்பட்டுவரும் பட்சத்தில் ஏப்பிரல் 02ல், தான் பிறந்த மும்பையில் நடக்கும் இறுதிப் போட்டியில் (வான்கடே மைதானத்தில்) விளையாடும் அரிய வாய்ப்பை சச்சின் பெற லாம்.

கடந்த 1983-ல் இந்திய அணிக்கு கபில் தேவ் முதல் முறையாக உலகக்கிண்ணம் பெற் றுத்தந்தார். அதற்குப்பின் 2003-ல் அணி யை இறுதிப்போட்டிவரை அழைத்துச்சென் றார் கங்குலி. 2007-ல் தோனி தலைமையி லான இந்திய அணி இருபது-20 உலகக் கிண்ணத்தைவென்று வரலாறு படைத்து அடுத்த 50 ஓவர் தொடரிலும் உலகக் கோப்பை கைப் பற்றி சச்சினின் கனவை நனவாக்க தோனி யின் படை தயாராகவுள்ளது.

## தொடரும் முதலிடம்

சச்சின் இதுவரை 05 உலகக்கிண்ணத் தொடரில் (1992, 96, 99, 2003, 2007) பங் கேற்றுள்ளார். மொத்தம் 36 போட்டிகளில் விளையாடியுள்ள இவர் அதிக ஓட்டங்கள் (ஆயிரத்து 796) எடுத்துள்ளவர்களின் பட்டி யலில் முதலிடத்தில் நீடிக்கிறார். ஒவ்வெரு முறையும் இவரது செயற்பாடு,


| ஆண்டு | போட்டி | ஓட்டங்கள் | அதிகம் | சராசரி | சதம் | அரைச்சதம் |
|---|---|---|---|---|---|---|
| 1992 | 08 | 283 | 84 | 47.16 | 00 | 03 |
| 1996 | 07 | 523 | 137 | 87.16 | 02 | 03 |
| 1999 | 07 | 253 | 140 | 42.16 | 01 | 00 |
| 2003 | 11 | 673 | 152 | 61.18 | 01 | 06 |
| 2007 | 03 | 64 | 57 | 32.00 | 00 | 01 |
| மொத்தம் | 36 | 1796 | 152 | 57.93 | 04 | 13 |

## சாதனைகள்

உலகக்கிண்ண அரங்கில் சச்சின் டெண்டுல்கர் நிகழ்த்தியுள்ள முக்கிய சாதனைகள்,

அதிக ஓட்டங்கள்:- ஆயிரத்து 796, அதிக அரைச்சதம்:- 17, அதிக சதம்:-41, ஒரே தொட ரில் அதிக அரைச்சதம்:- 7 (2003), ஒரே தொட ரில் அதிக ஓட்டங்கள்:- 673 ஓட்டங்கள் (2003), அதிக முறை ஆட்ட நாயகன்விருது:-08.

# எட்வேர்ட் எடின் இரட்டைச் சதம் விளாசல்; யாழ்.மத்திய கல்லூரிக்கு இன்னிங்ஸ் வெற்றி



(யாழ்ப்பாணம்)

எட்வேர்ட் எடினின் அதிரடி கலக்கலான இரட் டைச் சதத்தின் மூலம் யாழ். மத்தியகல்லூரி அணி இன்னிங்ஸ் மற்றும் 355 ஓட்டங்களால் மானிப் பாய் இந்துக் கல்லூரி அணியை வென்றது.

இலங்கை கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டக் கிரிக்கெட் சங்கம் யாழ். மாவட்ட பாட சாலைகளின் 19 வயதுப் பிரிவினருக்கிடையில் நடத்தும் மட்டுப்படுத்தப்படாத ஓவர்கள்கொண்ட இவ் ஆண்டுக்கான கிரிக்கெட் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதில் கடந்த செவ்வாய்க்கிழமை நடை பெற்ற ஆட்டம் ஒன்றில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வென்ற மானிப்பாய் இந்துக்கல்லூரி முதலில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியினைத்துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது.

இதனடிப்படையில் களமிறங்கிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் ஆரம்பவிக்கெட்டுக்கள் அடுத் தடுத்து வீழ்த்தப்பட்டன.

எனினும் நடுவரிசையில் களமிறங்கிய எட்வேர்ட் எடின் தனித்து நின்று அணியின் ஓட்ட எண்ணிக் கையை அதிகரித்தார். 06வது மற்றும் 08வது விக்கெட் இணைப்பாட்டம்மத்தியகல்லூரிக்குகைகொ டுத்தது. எடின் அதிரடியாக ஆடி இரட்டைச்சதம் கடந்து அசத்தினார்.

எடின் 247 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட் மிழக்க யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி முதலாவது இன்னிங்ஸில் 08 விக் கெட்டுக்க ளையிழந்து 418 ஓட்டங்கள் எடுத்து தனது ஆட்டத் தினை நிறுத்திக் கொண்டது. யூலியஸ் 26, கோகு லன் 20 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் மானிப்பாய் இந்துக்கல்லூரி சார்பாக பிரசன்னா 04 விக்கெட்டுக்களை யும், பானுசன் 03 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாட மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி களமிறங்கியது. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி யின் பந்துவீச்சினை எதிர்கொள்ள முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்டுக்களையிழந்து 32 ஓட் டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையுமிழந்து பலோ னுக்கு தள்ளப்பட்டது.

பந்துவீச்சில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சார்பாக கோகுலன் 03 ஓட்டங்களுக்கு 05 விக் கெட்டுக்களையும், வதூசனன் 19 ஓட்டங்களுக்கு 05 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பலோனுக்குத் தள்ளப்பட்ட மானிப்பாய் இந் துக்கல்லூரி அணி மீண்டும் தமது இரண்டாவது இன்னிங்ஸினைத் துடுப்பெடுத்தாடும் கட்டாயத் தில் களமிறங்கியது.

தொடர்ந்தும் விக்கெட்டுக்கள் சாய்க்கப்பட மானிப்பாய் இந்துக் கல்லூரியின் இரண்டாவது இன் னிங்ஸ் வெறும் 31 ஓட்டங்களுக்குள் முடிவுக்கு வந்தது. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி இன் னிங்ஸ் மற்றும் 355 ஓட்டங்களால் வெற்றி பெற் றது. மானிப்பாய் இந்துக் கல்லூரியின் துடுப் பாட்ட வீரர்கள் எவரும் இரண்டு இன்னிங்ஸிலும் 10 ஓட்டங்களுக்குமேல்பெறவில்லைஎன்பதுகுறிப்பி டத்தக்கது.

பந்துவீச்சில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சார் பாக வதூசனன் 05 விக்கெட்டுக்களையும், ஜெரிக் துசாந்த் 03 விக்கெட்டுக்களையும், தர்சன் 02 விக் கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

நகர சபை, யாழ்ப்பாணம்.



# ஐ.சி.ஆர்.சி. தலைவர் ஜனாதிபதியுடன் சந்திப்பு

(கொழும்பு)

சர்வதேச செஞ்சிலுவைசங்கத்தின் தலைவர் தடரெறு கோனே நேற்று வெள்ளிக்கிழமை மாலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்தார்.

நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு ஐ.சி.ஆர்.சி. இன் நிவாரண வேலைகளை மேற்பார்வை செய்யவும் செஞ்சிலுவை சங்கத்தின் தொண்டர்களை பாராட்டவுமே கோனே இலங்கை வந்துள்ளார்.

இவர் கிளிநொச்சி மற்றும் வவுனியா ஆகிய பகுதிகளுக்கு விஜயம் செய்த போது இலங்கை செஞ்சிலுவை சங்கங்களின் தலைவர் அபய சிங்க விளக்கங்களை வழங்கினார்.

50 வருடங்களுக்கு மேலாக செஞ்சிலுவைச் சங்கத்தின் தொண்டர்களாக வேலை செய்தவர்களையும் பாராட்டும் நிகழ்விலும் கோனே பங்குபற்றினார். இவர் இன்று சனிக்கிழமை மாலை இலங்கையிலிருந்து பயணமாகவுள்ளார். (ச-5)



## இந்திய...

அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தைகளை நடத்துமாறு இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா விடுத்த வேண்டுகோளையடுத்தே நிருபமா ராவ் கொழும்பு செல்வதாக இவ்வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டுள்ளன.

சிறிலங்கா கடற்படையினரால் அண்மையில் இரண்டு தமிழ் நாட்டு மீனவர்கள் சுடப்பட்டதையடுத்து இந்த விவகாரம் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. (ச-5)

## வன்முறை...

கொழும்பு மாவட்ட செயலாளர் அச்சுறுத்தப்பட்டமை, மாத்தளை தேர்தல் செயலகத்தில் ஒரே கட்சியை சேர்ந்த இரு குழுக்கள் மோதிக்கொண்டமை போன்ற சம்பவங்கள் பதிவாகியதாக அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

## இலங்கை...

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலத் தலைவர் ராமகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இப் பேரணி சிறிது தூரம் சென்றதும் தமிழகப் பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டதாகவும் ஆனால் இத் தடையையும் மீறி பேரணி செல்ல முயன்றதால் அவர்கள் அனைவரையும் பொலிஸார் கைது செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப் பேரணியில் இந்திய மற்றும் இலங்கை கடற்படையினர் கூட்டு ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என முழக்கங்கள் எழுப்பப்பட்டதாக இந்திய ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து படுகொலை செய்யப்பட்டுவருவதைக்கண்டித்து அடுத்த மாதம் 6 ஆம் திகதி வைகோ தலைமையில் நாகப்பட்டினத்தில் உண்ணாவிரதம் நடைபெறும் என ம.தி.மு.க அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ச-5)

## மர்மப் பொரு...

3 மணியளவில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. இதில் வவுனியா மனுவன் குளத்தைச் சேர்ந்த வர்களான என்.றதன் (வயது 18), என்.றமணன் (வயது 19) ஆகிய இருவரும்படுகாயமடைந்தனர்

படுகாயமடைந்த இருவரும் உடனடியாக கிளிநொச்சி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு நேற்றிரவு 6 மணியளவில் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர். இதில் என்.றதன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-51)

## நல்லிணக்க ஆணைக்குழு...

குறிப்பிட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் சாட்சியம் திரட்டும் பணிகள் மழைவெள்ளம் காரணமாக ஒத்தி வைக்கப்பட்டதாகவும் அம்பாறை மாவட்டத்தில் எதிர்வரும் பெப்ரவரி மாத நடுப்பகுதியளவில் சாட்சியங்கள் திரட்டப்படும்.

முக்கியமானவர்கள் என ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்படும் நபர்களுக்கு சாட்சியமளிப்பதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் பெப்ரவரிமாத நடுப்பகுதி வரையில் இவ்வாறு சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது. எழுத்து மூலமாகவும் வாய்மொழிமூலமாகவும் ஆயிரக்கணக்கான சாட்சியங்கள் திரட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆகஸ்ட் மாதம் 11ஆம் திகதி முதல் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு சாட்சியங்களை திரட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## கச்சதீவை மீளப்பெறு...

மையினால் இந்திய மீனவர்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கச்சதீவை இலங்கையிலிருந்து மீளப்பெற்றுக் கொள்ள இந்திய மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இதன் மூலம் இந்திய மீனவர்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கைக் கடற்படையினர் தம் மீது தாக்குதல் நடத்துவதாக தெரிவித்து தமிழக மீனவர்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர்.

தமிழகத்தின் 11 இடங்களில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது. குறித்த மீனவர்கள் பணி பகிஷ்கரிப்பு போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

மீனவர்களுக்கு போதியளவு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமென மீனவர்கள்வலியுறுத்தியுள்ளனர். (ச-5)

## புலிகள் மீதான தடையினா...

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு தடைவிதித்து தீர்ப்பாயம் பிறப்பித்த உத்தரவை இரத்துச் செய்ய வேண்டும் என ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என மத்திய அரசு உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை தடைவிதித்து மத்திய அரசு கடந்த ஆண்டு மே மாதம் 14ஆம் திகதி அறிவிப்பினை வெளியிட்டிருந்தது. இது குறித்து உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையில் தீர்ப்பாயம் அமைக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டது.

இவ் விசாரணையின் போது வைகோவின் மனுவுக்கு மத்திய உள்துறை அமைச்சின் சார்பில் கூடுதல் சொலிசிஸ்டர் ஜெனரல் எம்.ரவீந்திரன் பதில் மனு தாக்கல் செய்தார். இம் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பயங்கரவாத நடவடிக்கைகள் தடைச்சட்டத்தின்படி விசாரணை நடத்தி தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்தச் சட்டத்தால் வைகோவிற்கு எந்தப்பாதிப்பும் இல்லை.

இச் சட்டத்தால் பாதிப்பு ஏற்பட்டிருப்பதை ஆதாரத்துடன் நிரூபித்தால் மட்டும் தான் அதை ஏற்க முடியும் அப்படி நிரூபிக்காமல் விட்டால் அவர் தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளக் கூடாது.

இச்சட்டத்தால் வைகோவிற்கு பாதிப்பு ஏற்பட்டது உண்மையென்று எடுத்துக்கொண்டாலும் மத்திய அரசு சட்டத்தின் மூலம் புதுடில்லியில் அந்தத் தீர்ப்பாயம் அமைக்கப்பட்டிருப்பதால் இங்கு அதற்கான நிவாரணத்தை தேட முடியாது. எனவே வைகோவின் மனு தகுதியானதல்ல என்று அதைத்தள்ளுபடி செய்ய வேண்டும் என இம் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் இவ்வழக்கு விசாரணையை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு நீதிபதிகள் ஒத்தி வைத்துள்ளனர். இவ் வழக்கு விசாரணையின் போது வைகோவும் நீதிமன்றில் சமுகம் அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)


## விவாஹ சுபமுகூர்த்த பத்திரிகை

அன்புடையீர்,

ஸ்ரீ பகவத் கிருபையால் ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் விக்ருதி வருஷம் தை மாதம் 16 ஆம் நாள் (30.01.2011)ஞாயிற்றுக்கிழமை துவாதசி திதியும் மூலநக்ஷத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் பகல் 11.05 மணிமுதல் 12.00 மணிவரையுள்ள மேஷலக்ன சுபமுகூர்த்தத்தில்

பாரத்வாஜகோத்ரம்
நயினாதீவு சிவஸ்ரீ ஜம்புகேஸ்வரக்குருக்கள் தம்பதியினரதும்
சுதுமலை பிரம்மஸ்ரீ பொன்னுச்சாமிக்குருக்கள் தியாகராஜஐயர் தம்பதியினரதும்
பௌத்திரனும்
சிவஸ்ரீ ஐ. மஹேஸ்வரக்குருக்கள் சீதாலக்ஷ்மி தம்பதியினரின்
கனிஷ்ட புத்திரனுமான
சிரஞ்சீவி பாலகைலாசநாதசர்மா
என்கிற வரனுக்கு



கௌண்டின்ய கோத்ரம்
திருச்சி ப்ரம்மஸ்ரீ கிருஷ்ணஐயர் தம்பதியினரதும்
நல்லூர் சிவஸ்ரீ குருசாமிக்குருக்கள் தம்பதியினரதும்
பௌத்திரியும்
நியாயசிரோன்மணிப்ரம்மஸ்ரீ கி.சுப்பிரமண்யசாஸ்திரிகள் கமலாதேவி தம்பதியினரின்
கனிஷ்ட புத்திரியுமான
சௌபாக்யவதி மகாலக்ஷ்மி
என்கிற கன்னிகையை

கன்னிகாதான, திருமாங்கல்யதாரண, பாணிக்கிரகண, ஸப்தபதி செய்வதாய் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பிகையினதும், சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பிகையினதும் திருவருளுடனும் நல்லூர்ஸ்ரீ கைலாசப்பிள்ளையார், ஸ்ரீ நடேசப்பெருமான் அனுக்ரஹத்துடனும் ஸ்ரீ காஞ்சி காமகோடிஜகத்குரு சங்கர பரமாச்சாரியாள் பரிபூர்ண அருளாசியுடனும் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டுமேற்படி சுப முகூர்த்தம் "நல்லூர் ஸ்ரீ திருஞானசம்பந்தர் ஆதீன கல்யாண மண்டபத்தில்" நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் இஷ்டமித்ர பந்துக்களுடன் வருகைதந்து மேற்படி சுப முகூர்த்தத்தை சிறப்பித்து தம்பதியரை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

சிவஸ்ரீ. ஐ. மஹேஸ்வரக்குருக்கள்
ஸ்ரீமதி சீதாலக்ஷ்மி தம்பதியர்
ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்–நயினாதீவு
ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்–சுதுமலை
சுதுமலை, மானிப்பாய்.
யாழ்ப்பாணம்–ஸ்ரீ லங்கா
தொ.பே.இல. : 0094 21 2225151

ஸ்ரீமதி.கமலாதேவி சுப்பிரமண்ய சாஸ்திரிகள்
ப்ரம்மஸ்ரீ.சு.ராதாகிருஷ்ணசர்மா
ஸ்ரீமதி.ரா.அகிலாண்டேஸ்வரி தம்பதியர்
இல,33,நடேசர்கோவில்
கடைச்சாமி வீதி,நீராவியடி,
யாழ்ப்பாணம்–ஸ்ரீ லங்கா
தொ.பே.இல. : 0094 21 7201424

குறிப்பு :- சுபவிவாக சோபனானந்த வைபவம் (திருமணத் திருமுக வரவேற்புபசாரம்)
தைமாதம் 16 ஆம் நாள் (30.01.2011) ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான கல்யாண மண்டபத்தில் நடைபெறும்.

(இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

சுபம் – (இருவீட்டார் அழைப்பு)

(சி–2311)


## மரண அறிவித்தல்

### செல்வி புவனேஸ்வரி கணபதிப்பிள்ளை

(ஓய்வு பெற்ற தாதிய உத்தியோகத்தர்)



மண்டைதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்வி புவனேஸ்வரி கணபதிப்பிள்ளை அவர்கள் 27.01.2011 வியாழக்கிழமை அதிகாலை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான கணபதிப்பிள்ளை-வள்ளியம்மை தம்பதியினரின் பாசமிகு சிரேஷ்ட புத்திரியும், ஞானேஸ்வரி, காலஞ்சென்றவர்களான அன்னலெட்சுமி, நீலாம்பிகை (புனிதம்) ஆகியோரின் அருமைச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், சுந்தரலிங்கம் ஆகியோரின் மைத்துனியும், ரூபிகா (லண்டன்), மேனகா, பிரேமகாந்தன் (சுவிஸ்), ரேணுகா, செந்தூரன் (கனடா), சகிலன், வாசுகி, பிரதீபா ஆகியோரின் பெரியதாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (30.01.2011) நாளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில், மண்டைதீவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மண்டைதீவு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

6ஆம் வட்டாரம்,
மண்டைதீவு.

தகவல்:
சகோதரி, பெறாமக்கள்

(சி-2310)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.01.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.